விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை (27.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 313

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## அறிகுறிகள் இன்றி தொற்றாளர்கள்; நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகின்றது. அறிகுறிகள் இன்றி தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று ▷23

## மக்களின் பாதுகாப்பைக் கருதி சிலவேளை முழு நாட்டையும் முடக்குவது அவசியமாகும்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு சிலவேளை முழு நாட்டையும் முடக்குவது அவசியமாகுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரி ▷23

## குருநகர், பருத்தித்துறையைச் சேர்ந்த சாரதிகள் இருவருக்கு கொரோனா உறுதி

### பேலியகொட மீன்சந்தைக்கு சென்று திரும்பியவர்கள்

*(யாழ்ப்பாணம்)* யாழ்ப்பாணம் குருநகர் கடலுணவு உற்பத்தி நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு சாரதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் குருநகரையும் மற்றையவர் பருத்தித்துறையையும் சேர்ந்தவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பேலியகொட மீன் சந்தைக்கு மீன் கூலர் வாகனத்தில் சென்று வந்த இருவர் பாசையூரில் கடலுணவு நிறுவன வளாகத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவர்களுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## 2019 க.பொ.த உ/த வெட்டுப்புள்ளிகள் வெளியாகியது

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியாகியுள்ளது.

வெட்டுப்புள்ளிகளை https://admission.ugc.ac.lk/ என்ற பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று ▷23

## 2 நாட்கள் பாராளுமன்றம் மூடப்படுகின்றது

(கொழும்பு)

பாராளுமன்றம் இரண்டு நாட்களுக்கு மூடப்படும் என பாராளுமன்றப் பிரதிப் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகம் முழுவதும் தொற்று நீக்கம் செய்யப்பட ▷23

## கொரோனா நோயாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட படுக்கைகளில் 10 சதவீதம் மட்டுமே எஞ்சியுள்ளது

(கொழும்பு)

கோவிட் - 19 நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட வைத்தியசாலைகளின் படுக்கைகளின் எண்ணிக்கையில் 10 சதவீதம் மட்டுமே எஞ்சியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ▷23

## கொரோனாவுக்கு அதிகாரிகள் சரியான நேரத்தில் முடிவுகள் எடுக்காவிட்டால் கடுமையான விளைவுகள் ஏற்படும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்று தொடர்பாக உரிய அதிகாரிகள் சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்காவிட்டால் நாடு கடுமையான விளைவுகளை ▷23

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டுபிடிக்கும் அதிகாரம் அமெரிக்காவிடமே உள்ளது

(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டுபிடிக்கும் அதிகாரம் அமெரிக்காவிற்கு மட்டுமே உள்ளது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ▷23

## யாழ்.போதனாவிலும் இருவருக்கு கொரோனா

### பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் இருவருக்கு கொரோனா ▷23

## சுகாதார சட்டத்தை வடக்கில் முழுமையாக நடைமுறைப்படுத்துக

### ஆளுநர் சாள்ஸ் பணிப்பு

03ஆம் பக்கம் பார்க்க

## பாதிப்பு 8 ஆயிரத்தை தாண்டியது நேற்றும் 541 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மட்டும் 541 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று திங்கட்கிழமை இரவு வரை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்மூலம் மினுவாங்கொட -பேலியகொட கொரோனா வைரஸ் பரவல் கொத் ▷23

## துருக்கியிலிருந்து வந்தவர்களாலேயே கொரோனா இரண்டாவது அலை உருவானது

### புலனாய்வு விசாரணையில் கண்டுபிடிப்பு

11ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## முழு நாட்டுக்கும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை கிடையாது

### ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம்

(கொழும்பு)

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் முழு நாட்டுக்கும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை கிடையாது.

பொருளாதாரத்துக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் அரசாங்கம் செயற்படுகிறது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட்-19 வைரஸ் தாக்கம் காரணமாக பிரதேச மட்டத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை ஏன் முழு நாட்டுக்கும் பிறப்பிக்கக்கூடாது என எதிர்த் தரப்பினர் கேள்வியெழுப்புகிறார்கள்.

முழு நாட்டுக்கும் ஊரடங்கு சட்டத்தை பிறப்பிப்பதால் எவருக்கும் நன்மை கிடையாது. முழு நாட்டையும் முடக்க வேண்டிய தேவை ஏதும் தற்போது கிடையாது.


கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் மீண்டும் முழு நாட்டையும் முடக்கினால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும் என்றார். (ம-03)

## கிளிநொச்சி திருவையாற்றில் வெடி பொருட்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு 2ஆம் பகுதியில் தனியார் காணி ஒன்றில் அடையாளம் காணப்பட்ட வெடிபொருட்கள் நேற்று நீதிமன்றின் அனுமதியுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது. இரு நாட்களுக்கு முன்பு குறித்த காணியில் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டது. குறித்த காணியில் வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு பொது மக்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முற்பகல்



கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் அப்பகுதியில் காணப்பட்ட வெடி பொருட்கள் விசேட அதிரடிப்படையினரால் பாதுகாப்பாக அகற்றப்பட்டது. (ம-03,100)

## மன்னார் மாவட்ட மக்களுக்கான சுகாதார தரப்பின் அவசர வேண்டுகோள்

(மன்னார்)

கொழும்பில் இருந்து கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.20 மணியளவில் மன்னார் நோக்கி பயணித்த (ரத்னா ரவல்ஸ்) என்ற தனியார் பேருந்தில் பயணித்த மக்களையும், 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.45 மணியளவில் மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த அரச பேருந்தில் பயணித்த மக்களையும் உடனடியாக தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் தெரிவித்தார்.

கொழும்பு பேலியகொட பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் அங்கே மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி என அடையாளம் காணப்பட்ட நிலையில் தப்பி வந்த நபர் ஒருவர் மன்னார் புதுக் குடியிருப்பு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.

குறித்த பேருந்துகளில் பயணித்த மக்கள் உடனடியாக 071 847 4361 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தமது இருப்பிடத்தை தெரியப்படுத்திக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-03,285)

## கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் பதவி துறப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் தவிசாளர், தங்க வேலாயுதம் ஜங்கரன் அந்தப் பதவியிலிருந்தும் உறுப்புரிமையிலிருந்தும் விலகுவதாக உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருக்கும் கடிதம் மூலம் இந்த பதவி விலகலை அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் நிலவும் பிரச்சினைகள் தீர்க்கப்படாததால் தான் அந்தப் பதவியில் நீடிக்க விரும்பவில்லை என்றும் கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளர் தங்கவேலாயுதம் ஜங்கரன் தெரிவித்தார். (ம-03)

## இலங்கையை மோதல் களமாக மாற்ற பலர் முனைப்பு

### (வெளிவிவகாரச் செயலாளர் தெரிவிப்பு)

(கொழும்பு)

நடு நிலையான வெளிவிவகார கொள்கையிலிருந்து விலக முற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை தோல்வியை சந்தித்துள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் வலுவான நாடுகளின் செல்வாக்கின் மையத்தில் இலங்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் பல தரப்பினர் தற்போது இலங்கையை மோதல் களமாக மாற்ற விரும்புகின்றனர் என்றும் அதனை நாங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-03)

## பதுளையில் மரணவீட்டுக்குச் சென்றவருக்கு கொரோனா

### (பலர் தனிமைப்படுத்தலில்)

(பதுளை)

பதுளை- ஸ்பிரிங்வெளி, மேமலை பகுதியில் மரண வீடொன்றுக்குச் சென்று வந்த, ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த மரண வீட்டில் கலந்துகொண்டவர்களை தனிமைப் படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஸ்பிரிங்வெளி, மேமலை தோட்டத்தைச் சேர்ந்த 69 வயது பெண்ணொருவர், உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார். அவரது இறுதி கிரியையில் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் கலந்துகொண்டுள்ளார்.

இவர் பேலியகொட மீன் சந்தையில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த நபர், பதுளைக்குச் சென்று வந்தமை தெரியவந்ததையடுத்து ஹட்டன் பொலிஸார் உடனடியாக இவ் விடயத்தை பதுளை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து பதுளை பொலிஸார், ஸ்பிரிங் வெளி பகுதிக்கு சென்று மரண வீட்டுக்கு வந்த அனைவரையும் தனிமைப் படுத்தியுள்ளதுடன் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-03)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
இளமதி நடராஜா
இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2 I
ஆசிரியப் பணிதனில் பயணித்த பயணம்
நேற்றுடன் நிறைவானதே
ஆண்டுகள் இருபதாய் ஓவியக் கலைதனை
ஒழுங்குடனும், ஒழுக்கத்துடனும்
மாணவர்க்கு ஊட்டிய
உமது சேவைதனைப் பாராட்டுவதோடு
அகவை அறுபதினை வாழ்த்துக்களையும்
தெரிவித்து மகிழ்கின்றோம்.
Congrats!
எமது கல்லூரிச் சேவைக் காலம்
[05.03.2014 - 26.10.2020]
(4479)
யா/இனுவில் மத்திய கல்லூரி, இனுவில்.
அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியையும்
மழைய மாணவியுமான
திருமதி தயாநிதி நிலகேசன்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
சுந்தரம் செல்வரத்தினம் (J.P)
அவர்கள் இறைவனடி
எய்தியமையையிட்டு அன்னாரின்
குடும்பத்தினரின் துயரத்தில்
நாமும் பங்கு கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா
இறைவன் நிழலில் நித்திய
இளைப்பாற வேண்டி
நிற்கின்றோம்.
(4478)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# வடக்கில் அபாயவலயமாக வேலணை- கண்டாவளை- வவுனியா

(கொழும்பு)

**சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவினால் கொரோனா வைரஸ் பரவல் குறித்த அதிக அபாயமுள்ள பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 14 நாட்களில் காணப்பட்ட நிலைவரத்தின் அடிப்படையில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பிரதேச மருத்துவ அதிகாரிகள் (MOH) பிரிவுகளுக்கேற்ப இவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.**

அதற்கமைய அதிகூடிய அபாயமுடைய பகுதிகளாக வட மாகாணத்தில் வேலணை மற்றும் கண்டாவளை ஆகிய பகுதிகளும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா பகுதியும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம், ஆனமடுவ மற்றும் முந்தலம் ஆகிய பகுதிகள் அபாயமுடையவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மாத்தளையில் பஸ்கொட மற்றும் பெல்லேபொல, வில்கமுவ என்பனவும் அம்பாறை மாவட்டத்தில் மகாஓயாவும் அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் மெதகம அபாயமுடைய பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல மற்றும் ரன்வெல, கண்டியில் யடிநுவர மற்றும் கங்காவத்த, நுவரெலியாவில் பம்பரதெனிய ஆகியவை அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டி, நாரம்மல, பன்னல, அலவ்வ மற்றும் பொல்கஹாவெல அபாயமுடைய பகுதிகளாகும்.

கம்பஹாவில் மீரிகம, திவுலபிட்டி, கட்டான, சீதுவ, மினுவாங்கொடை, வத்தளை, ஜாஎல, அத்தனகல, வெயாங்கொடை, கம்பஹா, ராகம, களனி, தொம்பே, பியகம, கிரிந்திவெல மற்றும் பூகொட ஆகிய பகுதிளும் கொழும்பில் கடுவலை, கொத்தொட்டுவ, கொலன்னாவை, பத்தரமுல்ல, புறக்கோட்டை, நாவல, கஹதுட்டுவ, பிலியந்தல மற்றும் வத்துவ ஆகிய பகுதிகள் களுத்துறையில் மத்துகம, அம்பாந்தோட்டையில் சூரியவெள ஆகிய பகுதிகள் அபாயமுடையவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

# வடக்கில் சுகாதார சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட தனிமைப் படுத்தல் மற்றும் தொற்றுநோய் தடுப்புத் தொடர்பான கட்டளைச் சட்டம் தொடர்பான வர்த்தமானியைவடக்கு மாகாணத்தில்முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் பொது இடங்களில் சமூக இடைவெளியைப் பேணாதவர்கள், முகக் கவசம் அணியாதோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில்கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

நாட்டில் கொரோனாத் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் வட மாகாணத்தில் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை சுகாதார நடைமுறைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி, பொலிஸ் உள்ளிட்ட அனைத்துத் துறையினரும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் நெடுங்கேணியில் ஏற்பட்ட தொற்று நிலை காரணமாக அவர்களுடன் தொடர்புடையோரை தனிமைப்படுத்த போதுமான இடவசதி இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வடக்கில் இரண்டு சம்பவங்களால் கொரோனாப் பரவல் அச்சநிலை காணப்படுவதாக அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

கொரோனாத் தொற்று தொடர்பில் தேடப்பட்டவர் மன்னாரில் வந்து நடமாடியமை மற்றும் தென்னிலங்கையில் தனிமைப்படுத்தல் இடங்களிலிருந்து வருகை தந்து தம்மை வெளிப்படுத்தாமல் இருப்போரால் அச்சுறுத்தல் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-7)

# இரட்டைக் குடியுரிமை விவகாரம் ஜனாதிபதிக்கு ஆத்திரத்தையூட்டியது

## பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை பெற்ற ஒருவர் அரசியலில் ஈடுபட அனுமதிக்கும் அரசியலமைப்பு விதிகளை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆத்திரமூட்டியதாக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன தெரிவித்துள்ளார்.



இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களில் நாட்டை நேசிக்கும் மற்றும் நாட்டுக்காக சேவை செய்ய விருப்பமாக உள்ளனர் என்று ஜனாதிபதி கூறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விதிகள் சமீபத்தில் நாடாளுமன்ற வாக்கெடுப்பைத்தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க குடியுரிமையை கைவிட்ட போது அவர் சந்தித்த அசௌகரியங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக் காட்டியதாகவும் வீரசுமன குறிப்பிட்டார். (ஜ-4)

# குணமடைந்தோர் 3933

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 130 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் குறித்த 130 பேரும் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து ,933 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 537 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ள நிலையில் 16 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# 20 இன் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்கள் தனிப்பட்ட நலன்களுக்கு பயன்படுத்தப்பட மாட்டாது

## நம்பிக்கை வெளியிட்டார் கரு

(கொழும்பு)

அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்டிருக்கும் மட்டுமீறிய, உயர் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப்பதவி தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தப்படாது என்று நம்புவதாகக் குறிப்பிட்டிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜனநாயகம் மற்றும் ஒழுக்கத்தின் கோட்பாடுகள் மேலோங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்திற்கு அனுமதியளித்து இவ்வாரம் சபாநாயகர் கையெழுத்திட்டதும், உலகிலேயே தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட உயர் அதிகாரங்களைக்கொண்ட ஜனாதிபதியொருவரை இலங்கை கொண்டிருக்கும்.

இவ்வாறான மட்டற்ற உயர் அதிகாரங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தப்படாது என்று நம்புகின்றோம். அத்தோடு ஜனநாயகம் மற்றும் ஒழுக்கத்தின் கோட்பாடுகள் மேலோங்கும் என்றும் எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அத்தோடு கொரோனா வைரஸ் பரவல் தொடர்பிலும் அவர் பதிவொன்றை செய்திருக்கிறார். அதில் கூறியிருப்பதாவது,

கொரோனா வைரஸ் தொற்று வறுமையை யும் பசியையும் தோற்றுவித்திருக்கிறது. பெற்றோர் வருமானத்தை இழக்கும் போது பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்தத் தொற்றுநோயின் விளைவாக மந்தபோசணை நிலை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே இதற்கு விரைவான மாற்றுவழியைக் கண்டறிய வேண்டியது அவசியமாகும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். (நி-7)

# இடுகமவிற்கு என்ன நடந்தது? எதிர்க்கட்சி கேள்வி

(கொழும்பு)

கொரோனாவுக்காக அரசாங்கத்தினால் சேகரிக்கப்பட்ட நிதி தொடர்பில் வெளிப்படைத் தன்மை பின்பற்றப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த நிதி எவ்வளவு சேகரிக்கப்பட்டது என்பதை பாராளுமன்றத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

கொரோனா முதல் அலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் "இடுகம" என்ற பெயரில் இந்த நிதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு ஜனாதிபதி நிதியில் இருந்து 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இந்த நிலையில் இந்த நிதிக்கும், இதற்கு பின்னர் சேகரிக்கப்பட்ட நிதிகளுக்கும் என்ன நடந்தது என்பதை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று மயந்த திஸாநாயக்க கோரியுள்ளார்.

இதேவேளை இரண்டாவது கொரோனா அலைக்கான காரணத்தை கண்டுபிடிக்க வேண்டும். பிரண்டிக்ஸ் நிறுவனமே இரண்டாம் கொரோனா அலைக்கு காரணம் என்றால் அந்த நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் அந்த நிறுவனம் நட்ட ஈட்டை செலுத்த வேண்டும் என்றும் மயந்த தெரிவித்துள்ளார். (நி-7)

# கொரோனா நோயாளியின் குடும்பத்தினர் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுவர்



**(கொழும்பு)**

**கொரோனாத் தொற்று உறுதியானோரின் குடும்ப உறுப்பினர்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுவார்கள் என கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள இராணுவத் தளபதி, இன்று (27) முதல் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந்தக் காலகட்டத்தில் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் அவர்களுக்கு தொற்று உள்ளதா எனக் கண்டறிய மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.சோதனை முடிவு கிடைக்கும் வரை அவர்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க அறிவுறுத்தப்படுவார்கள் என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறிப்பிட்டார். (ஜ-4)

# பாராளுமன்றம் நுழைவு குறித்து மௌனம் காக்கும் பசில்

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்குள் நுழைவார் என்ற செய்திகளுக்கு பதிலளிக்க முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மறுத்து விட்டார்.

அரசியலமைப்பின்20 ஆவது திருத்தம் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கான பாதையை உருவாக்க பயன்படுத்தப்படவுள்ளது என்று பலதரப்பினரும் கருத்துக்கள் தெரிவித்து வந்த நிலையில் பசில் ராஜபக்ஷ இது குறித்து ஊடகங்களின் கேள்விகளுக்கு பதில் தெரிவிக்க மறுத்து விட்டார்.

தன்னை பாராளுமன்றத்திற்கு அழைத்துவர பயன்படுத்தப்படுகிறது எனக் கூறி 20 ஆவது திருத்தத்தின் முக்கியத்துவத்தை பறிக்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# இரத்தினபுரியில் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள சில கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரத்தினபுரி, மல்வல எம்புல்தெனிய பகுதியில் மீன் வியாபாரி ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்திற்குட்பட்ட சிரிபாகம கிலிமலே வடக்கு, கிலிமலே தெற்கு, கெடவல மற்றும் மாபலான ஆகிய கிராமங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த பகுதிகளில் நேற்று முதல் பயணக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# பெண் படுகொலை

(கொழும்பு)

ஹொரவப்பொத்தான நகர் பகுதியில் உள்ள தனியார் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றிற்குள் வைத்து பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனது கணவருடன் கடன் வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றிற்கு சென்ற பெண்ணிற்கு இனம் தெரியாத நபர் ஒருவர் கத்தியால் குத்தியுள்ளார். குறித்த பெண் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஹொரவப்பொத்தான பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# விவசாயத்தை மேம்படுத்த குளங்கள் புனரமைப்பு

## அரசாங்கம் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள 400 குளங்களை புனரமைத்து அதன் மூலம் விவசாய செய்கையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருவதாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகிழடித்தீவில் உள்ள இறால் பண்ணையினை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலான இரண்டாம் கட்ட கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது விவசாய செய்கை குறித்து கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேசசபை தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள்,விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது மகிழடித்தீவில் உள்ள இறால் பண்ணையினை மீள ஆரம்பிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது அதன் மூலம் ஏற்படும் சவால்களை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. (ஜ-4)

# 7 சிறுவர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

பொரளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் ஏழு சிறுவர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

குறித்த 7 சிறுவர்களுடன் 3 தாய்மார்களும் இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது.

இவ்வாறு புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள அனைவரும் பேலியகொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்றும் வைத்தியசாலையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)



# வனப்பகுதி தீக்கிரை

(பதுளை)

பதுளை ஹாலி-எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உனுகொல்ல தோட்ட வனப்பகுதிக்கு இனந் தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டமையால் 20 இற்கும் அதிகமான ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.

பதுளை மாவட்டத்தில் மிகவும் வெப்பத்துடனான கால நிலை காணப்படுகின்ற நிலையில் சில சமூகவிரோதிகளால் வனப்பகுதிகளுக்கு தீ வைக்கப்பட்டு வருகிறது. எனவே சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோர் குறித்து தகவல் தருமாறு பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் தெரிவித்தார். (ஜ-4)

# மீன்களைப் பதனிடுவது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் ஆராய்வு


(கொழும்பு) ----------------------

**கொரோனா காரணமாக கடற்றொழில் செயற்பாடுகள் சீரற்ற நிலையில் காணப்படுவதனால் கரைக்கு கொண்டு வரப்படுகின்ற மீன்களை களஞ்சியப்படுத்தல், கருவாடு பதனிடுதல் மற்றும் ரின்மீன் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்தார்.**

மீன் ஏற்றுமதியாளர்கள், கருவாடு உற்பத்தியாளர்கள், ரின்மீன் உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கும் அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது குறித்த வேண்டுகோளை விடுத்தார்.

கொரோனா காரணமாக பேலியகொட மீன்சந்தை உட்பட பல்வேறு மீன் சந்தைகள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் ஏற்றுமதியும் தடைப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, பலநாள் கலங்களில் மூலம் பிடித்துவரப்பட்ட ஆயிரக் கணக்கான தொன் மீன்கள் டிக்கோவிற்ற உட்பட நாட்டின் பல்வேறு துறைமுகங்களில் தேங்கிக் கிடப்பதனால் பழுதடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



இது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நேற்றைய அவசர கலந்துரையாடலில், கருத்து தெரிவித்த கருவாடு மற்றும் ரின் மீன் உற்பத்தியாளர்கள், மீன்பிடித் துறைமுகங்களில் தேங்கிக் கிடக்கின்ற மீன்களை கொள்வனவு செய்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கு தாங்கள் தயாராக இருக்கின்ற போதிலும், கருவாடு மற்றும் ரின்மீன் போன்றவற்றிற்கான இறக்குமதி வரி தளர்த்தப்பட்டுள்ளதனால் தமது உள்ளூர் உற்பத்திகளுக்கு போதிய சந்தை வாய்ப்பு இல்லாமல் இருப்பதாக தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த கடற்றொழில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் ஆகியோர் குறித்த பொருட்களுக்கான இறக்குமதி வரி தொடர்பாக அமைச்சரவையில் கலந்துரையாடுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஜ-4)

## வெளி மாவட்ட வீதியோர வியாபாரிகளுக்கு தடை




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்தில் வெளிமாவட்டத்தினை சேர்ந்த வீதியோர வியாரிகளின் வியாபார நடவடிக்கையின்ன தடைசெய்துள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.தவராசா தெரிவித்துள்ளார்.

இது குறித்த ஊடக சந்திப்பு ஒன்றினை நேற்று நடத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாடுமுழுவதும் வேகமாக கொரோனா பரவிக் கொண்டிருக்கின்றது. கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் நோய்த் தொற்று தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தொற்றினை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இதன்படி வெளிமாவட்டங்களில் இருந்து வர்த்தக நோக்கத்துடனோ ஏனைய நோக்கத்துடனோ யாரும் வருவது தடைசெய்யப்படவேண்டும்.

முன்னர் கொரோனா பரவியபோது இருந்த முன்னாயத்தங்கள் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இல்லாததை அவதானிக்க முடிகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பு இருந்த தடைகள் எதுவும் தற்போது இல்லை. முகக்கவசங்கள் அணியுமாறு வலியுறுத்தப்படுகின்றது.

வெளிமாவட்டத்தினை சேர்ந்த பலர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தலைமறைவாக இருக்கின்றார்கள். எனவே ஆபத்தான கொரோனா தொற்றில் இருந்து மக்கள் அனைவரையும் பாதுகாக்கவேண்டிய முன்னாயத்த வேலைகளை முன்னெடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5-281)

# பேருந்து, கணனி, புத்தகங்கள் ஜனாதிபதி செயலகத்தால் அன்பளிப்பு






(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தருமபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஜனாதிபதி செயலகத்தினால் ஒரு பேருந்து வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்கள் கல்வி கற்பதற்கான கணனி, 12 இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் மற்றும் கலைப் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. (5-4-316)



**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளிற்கு வாழ்வாதார உதவிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 12 மணியளவில் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன் தலைமையில் இடம்பெற்றது.**

**(படம்: சப்தசாங்கரி, கிருஸ்ணகுமார்)**

# முகக் கவசம் அணியாதவர்களை அணிய வைத்து அனுப்பும் பொலிஸார்

(குருமன்காடு)

கொவிட் -19 இன் இரண்டாவது அலையானது வேகமாகப் பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக வவுனியாப் பொலிஸார் முகக்கவசம் அணியாது பயணிப்பவர்களைத் தடுத்து நிறுத்தி கடும் எச்சரிக்கையின் பின் விடுவித்து வருகின்றனர்.

இலங்கையில் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணியுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் பொரும்பாலான மக்கள் அரசாங்கத்தின் உத்தரவினை பொருட்படுத்தாது முகக்கவசம் அணியாது . ப்யணிக்கின்றனர்.

இதனையடுத்து வவுனியா மாவட்ட கொரோனாத் தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.பி.குருசிங்கவின் தலைமையிலான பொலிஸார் நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையம் மற்றும் வவுனியா நகரப்பகுதிகளில் முகக்கவசம் அணியாது செல்பவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களை பதிவு செய்து கடும் எச்சரிக்கையின் பின் விடுவித்தனர்.

இவ்வாறு முகக்கவசம் அணியாது செல்வர்களை எச்சரிப்பது மாத்திரம் அல்லாது அவர்களது வாகனத்தினை அவ்விடத்திலேயே நிறுத்தி விட்டு முகக்கவசத்தை வாங்கி அணிந்து விட்டு வாகனத்தினை எடுத்துச்செல்லுமாறும் பொலிஸார் பொதுமக்களுக்கு பணிப்புரை விடுத்தனர்.(5-4-250)

# நூல்கள் காட்சிப்படுத்தல்



(குப்பிழான்)

சுன்னாகம் பொதுநூலகத்தில் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்புத்துறை மாணவர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக அமையும் நூல்கள் தற்போது வாசகர் பயன்பாட்டிற்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ளதாக மேற்படி நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி ஜெயலட்சுமி சுதர்சன் தெரிவித்துள்ளார். (5-4-18)

# நூலக அங்கத்துவம் இலவசம்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தினர் "நூலொன்றை வாசிப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப் பொருளில் இலவச நூலக அங்கத்துவம் வழங்கும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில் ஒக்டோபர் மாதம் முழுவதும் இந்தச் செயற்பாடு இடம்பெறும்.

எனவே மீசாலை பொது நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் நூலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து நூலக அங்கத்தவர்களாக இணைய முடியும் என நூலகத்தினர் தெரிவித்துள்ளனர். (5-4-30)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவு கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம்,மிருதங்கம்,வயலின், நாடகமும் அரங்கியலும், சித்திரமும் வடிவமைப்பும், சிங்களம் ஆகிய பாட நெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் உடுவில் கலாசார மத்திய நிலையத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான திறமை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்கக் கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி கலாசார மத்திய நிலையம் கற்பொக்கணை பிள்ளையார் கோவிலடி உடுவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (5)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளால் காலபோக நெற்பயிர்ச் செய்கைக்கு பாதிப்பு ஏற்படுவதாக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் சாவகச்சேரி பிரதேச சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது காலபோக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பமாகியிருக்கும் நிலையில் வரணி-இயற்றாலை சவணாள், கரம்பைக்குறிச்சி, கப்பூது போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் விளையும் நெற்பயிர்களுக்கு கட்டாக்காலிகளால் பாதிப்பு ஏற்படுகிறது.

இது தொடர்பாக அப்பகுதி விவசாயிகள் தென்மராட்சி விவசாய சம்மேளனம், கமநல சேவை நிலையம் மற்றும் கரவெட்டி விவசாய சம்மேளனம் ஆகிய அமைப்புக்களிடம் முறையிட்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி மக்களின் வாழ்வாதாரமான விவசாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

எனவே சாவகச்சேரி பிரதேசசபை விவசாயிகளின் நலன் கருதி உரிய தரப்பிற்கு இதனைத் தெரியப்படுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (5-4-30)

# இலவச மூக்குக் கண்ணாடி வழங்கி வைப்பு



(குப்பிழான்)

யாழ். சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் தேவையுடையோருக்கு 100 மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் ஆர்.டி.ஜி.விமலசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண் மருத்துவர் திலீபன், இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் ம.பிரதீபன், லயன் கழக மாவட்ட உதவிப் பொருளாளர் லயன். பால குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-18)

# பனைவளம் பெருக முயற்சிகள் எடுப்போம்

## வலி. கிழக்கு தவிசாளர்



(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் வாழ்வியலில் பனை வளம் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

அவ்வகையில் பனை வளத்தினைக் காக்கும் அதே வேளை மீள் உருவாக்கம் செய்யும் பொறுப்பினை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

பிரதேசத்தில் பயன்பாடின்றிக் காணப்படும் நிலங்களில் பனை விதைகளை நடும் செயற்றிட்டத்தினை கடந்த சனிக்கிழமை முதற்கட்டமாக ஆரம்பித்து வைத்து கருத்துரைக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், . மக்களின் பொருளாதாரம், கலாசாரம், பண்பாடு என சகல மட்டங்களிலும் பனை முக்கியத்துவமுடையது. கற்பகதருவின் பயன்கள் பற்றி மக்களிடத்தில் விளங்கப்படுத்தப்பட வேண்டிய அவசியம் கிடையாது. எமது கிராமியப் பொருளாதாரத்தில் மிக முக்கிய வளங்களில் ஒன்று. அப்படியான சூழ் நிலையில் , காணப்படுகின்ற பனை மரங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றியும் யுத்தத்தினால் அழிக்கப்பட்ட பனை மரங்களை எவ்வாறு மீளுருவாக்கம் செய்யப் போகின்றோம் என்பதும் சவாலான காரியமாகவே உள்ளது.

அழிக்கப்பட்ட பனைவளத்தினை மீளுருவாக்கம் செய்வதற்கு பாரிய செயற்றிட்டம் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் அது பெரியளவில் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்களான எமக்கும் பொறுப்புள்ளது. அப்பொறுப்பினை உணர்ந்தே முடிவு எடுத்து இச் செயற்றிட்டத்தினை முதற்கட்டமாக வல்லையில் ஆரம்பித்துள்ளோம்.

தொடர்ந்து பாவனையற்று காணப்படும் அரச காணிகளில் இச் செயற்றிட்டம் தொடரும். எதிர்வரும் காலங்களில் இவ்விடயத்துடன் தொடர்புடைய அரச, கூட்டுறவு, அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒன்றிணைத்து பயணிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4)



நெல்லியடி சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கரவெட்டி

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2021-31.12.2021 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-27/10/2020இல் இருந்து 09/11/2020ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-10/11/2020 காலை 10.30 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-10/11/2020 காலை 10.30 மணிக்கு.
04. கேள்வித் தொகை, கேள்விப் பத்திரக் கட்டணம் மற்றும் மாத வாடகை ஆகிய வையும் சேர்த்து அறவிடப்படும்.(காலத்திற்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக் கப்படும் வரி ஆகியவையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.)
05. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்தி ரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூல மாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
06. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
07. ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
08. தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டிருப்பின், அது அறியவருமிடத்து அவரது கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
09. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
12. மரக்கறிச் சந்தையினை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.,
I. குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு தெளிவாக பார்க்கக் கூடியதாக வைக்கப்படல் வேண்டும்,
தராசுகள் நிறுவை திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.
II. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான இடமொ ன்றை விவசாயிகளுக்கு குத்தகைதாரரால் ஒதுக்கிக் கொடுக்கப்படல் வேண்டும், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடம் இருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக இடவாடகை அறவிடுதல்.
III. குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர், திகதி, பொருளின் வகை, பொருளின் நிறை, மொத்தத் தொகை, அறவிடப்படும் வரித்தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும்.
IV. உற்பத்திப் பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே தரத்திற் கேற்பவும், விலை கூறி விற்றல் மூலமும் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும்.
V. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடம் இருந்து தரகுப் பணம் பெறுவதை நிறுத்துதல்.
VI. நிலக்கீழ் விவசாய உற்பத்தி பொருட்களில் சில தவிர்ந்த ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு கழிவு விதிக்கக்கூடாது.
VII. வாழைப்பழக் குலைக்கும்,வாழைக் காய்களுக்கும் மட்டும் தண்டுக்கு கழிவுகளை விதிக்கலாம்.
VIII. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படுதல் வேண்டும்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ.இல | குத்தகை விபரம் | 2021ஆம் ஆண்டு ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம். | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை(வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை -துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட(அங்காடி நீங்கலாக) | 8,269,400.00 | 82,700.00 | 1,000.00 | - |
| 2 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 192,650.00 | 2,000.00 | 500.00 | - |
| 3 | கொட்டடிச்சந்தை | 7,050.00 | 500.00 | 500.00 | - |
| 4 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 56,250.00 | 600.00 | 500.00 | 100.00 |
| 5 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 671,000.00 | 6,750.00 | 500.00 | 100.00 |
| 6 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 227,500.00 | 2,300.00 | 500.00 | 100.00 |
| 7 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 618,200.00 | 6,200.00 | 500.00 | 100.00 |
| 8 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 88,200.00 | 900.00 | 500.00 | 100.00 |
| 9 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 550,000.00 | 5,500.00 | 500.00 | 100.00 |
| 10 | நெல்லியடி மீன் சந்தை | 784,650.00 | 7,850.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 11 | உடுப்பிட்டி சந்தை | 1,172,050.00 | 11,800.00 | 500.00 | - |
| 12 | அந்திரான் சந்தை | 113,550.00 | 1,150.00 | 500.00 | - |
| 13 | அந்திரான் மாட்டிறைச்சிக்கடை | 719,950.00 | 7,200.00 | 500.00 | 100.00 |
| 14 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 559,900.00 | 5,600.00 | 500.00 | 100.00 |
| 15 | நவிண்டில் சந்தை | 14,650.00 | 500.00 | 500.00 | - |
| 16 | மண்டான் சந்தை | 47,300.00 | 500.00 | 500.00 | - |
| 17 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 122,300.00 | 1,250.00 | 500.00 | 100.00 |
| 18 | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 819,500.00 | 8,200.00 | 500.00 | 100.00 |
| 19 | உடுப்பிட்டிச்சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 161,700.00 | 1,650.00 | 500.00 | - |
| 20 | சாண்டா சந்தை கோழிக்கடை | 73,400.00 | 8,00.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 21 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 48,550.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 22 | துன்னாலை வடக்குச் சந்தை | 63,950.00 | 700.00 | 500.00 | - |

IX. அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு அதற்குரிய பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் குத்தகையாளரினால் வரி அறவிடக் கூடாது, நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம்.
X. சந்தைக்கு வருகை தருகின்ற பாவனையாளர்களினதும்,பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். இதற்கு மட்டும் பற்றுச்சீட்டை வழங்க கட்டணம் அறவிடமுடியும்.
XI.இடவசதி ஒதுக்கப்படாது பாவனையாளர்களினாலும் பொருட்களை ஏற்றி இறக்குபவர்களினாலும் நிறுத்தப்படும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், வாகனங்களுக்கு கட்டண அறவீடுகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது.
13. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
14. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடாத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.
15. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை, கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
16. எம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட வேண்டும்.
17. இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்டதிட்டங்களிற்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.
18. கொல்களம் மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகை உரிமையாளரால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் சருமநோய்கள், தொற்றுநோய்கள், தமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டும்.
19. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித் தொகையினை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
20. மேற்கூறிய நிபந்தனைகளுக்கு அமைய குத்தகைக்காரர் நடக்கத் தவறுவாராயின் அல்லது அக்கடைக்கான குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குத்தகைக்காரர் நடப்பாராயின் எந்த நேரத்திலும் குத்தகைக்காரரை வெளியேற்றவும் அல்லது குத்தகையை இரத்துச் செய்யவும், குத்தகை நடைபெற்ற காலப்பகுதிக்கான நிலுவையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்யவும்,1/3 பங்கு பணத்தை மீள வழங்காது முறையான அறிவித்தல் கொடுத்து எஞ்சி இருக்கும் காலத்திற்கு குத்தகையை கேள்விக்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கும் குத்தகை கொடுப்பவர்களிற்கு உரிமை உண்டு.
21. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையுடன் செய்து கொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.
22. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

க.த.ஐங்கரன்,
தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

(C-584)

# பேருந்து-டிப்பர் விபத்து; வவுனியாவில் சம்பவம்




(குருமன்காடு)

வவுனியா ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக இ.போ.சபை பேருந்தும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து ஏ-9 வீதியூடாக ஓமந்தை நோக்கி டிப்பர் வாகனம் பயணித்துக் கொண்டிருந்த சமயத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று வவுனியா, நகரசபை வீதியிலிருந்து ஏ-9 வீதிக்கு ஏற முற்பட்ட வேளை டிப்பர் வாகனம் திடீரென தனது வேகத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்திய போது டிப்பருக்கு பின்பக்கமாக கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இ.போ.ச பேருந்து டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் இ.போ.ச. பேருந்தின் முன்பகுதி பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், பேருந்தில் பயணித்த பயணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# தூய குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலவன்பொக்கணை கிராம மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட தூயகுடிநீர் விநியோகத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அம்பலவன்பொக்கணை கிராமத்தில் மக்களினுடைய குடிநீர்த் தட்டுப்பாடு மற்றும் தூய குடிநீர் இன்மை போன்ற பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக பெரண்டினா நிறுவனத்தினால் அம்பலவன்பொக்கணை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்குரிய கட்டடம் அமைக்கப்பட்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று அம்பலவன்பொக்கணை கிராமத்தில் இடம்பெற்றது

கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் இ.கஜிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் , முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கணேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க. தவராசா மற்றும் பெரண்டினா நிறுவன உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத் தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சுகாதார நடைமுறைகளை பேணி மிகக் குறைந்தளவானவர்களுடைய பங்குபற்றலுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (5-281)

# வவுனியா குளத்தில் சுற்றுலா மையம் எதிர்ப்பு துண்டுப் பிரசுரம் விநியோகம்

(நெளுக்குளம்)

வவுனியா குளத்தினுள் நகரசபையால் சுமார் 2 ஏக்கர் வரை மண் போடப்பட்டு சுற்றுலா மையம் அமைக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா குளத்திற்கான மக்கள் செயலணி நேற்று துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டது.

வவுனியா குளத்தில் ஒரு பகுதியில் அனுமதி பெறப்படாது நீர்ப்பாசன திணைக்களத்தின் ஒப்புதலுடன் கிரவல் மண் இடப்பட்டு பூங்கா மற்றும் படகு சவாரி என்பன உள்ளடங்கிய சுற்றுலா தளம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக இயற்கை விரும்பிகள் குளத்தினுள் மண் போடப்பட்டமை விவசாயத்தினை பாதிக்கும் மற்றும் நிலத்தடி நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் என தெரிவித்து எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் வவுனியா குள கமக்காரர் அமைப்பு குறித்த சுற்றுலா தளத்திற்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில் அவ் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா குளத்திற்கான மக்கள் செயலணி என்ற அமைப்பு குளத்தின் பயன்பாடு மற்றும் சுற்றுலா மையத்தினால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வு சுவரொட்டி பிரசாரத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக குறித்த செயலணி நேற்றுக்காலை வவுனியா நகர்ப்பகுதியில் வவுனியா குளத்தினுள் மண் இடப்பட்டமையினால் ஏற்படப்போகும் ஆபத்துக்கள் தொடர்பில் துண்டுப்பிரசுரத்தினையும் விநியோகித்தனர்.

இதில் இளைஞர்கள், வயதானவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# கைவிடப்பட்ட குளங்கள் புனரமைக்க நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கைவிடப்பட்ட 105 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 83 குளங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாகவும், மக்கள் குளத்து காணிகளை அபகரித்து குடியேறியமை காரணமாகவும் வவுனியா மாவட்டத்தில் பல குளங்கள் அழிவடைந்துள்ளதுடன், பல குளங்கள் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

இந்நிலையில் கடந்த 5 வருடங்களில் வவுனியா மாவட்டத்தில் 105 கைவிடப்பட்ட குளங்கள் புனரமைக்கப்பட்டு தற்போது விவசாயிகள் மற்றும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், கைவிடப்பட்ட நிலையில் உள்ள 83 குளங்களையும் 29 அணைக்கட்டுக்களையும் புனரமைப்புச்செய்து நீரைத் தேக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (5-4-250)

# சாரதி மற்றும் நடத்துநர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(குருமன்காடு)

யாழ்ப்பாணத்திலிருந்து - வலஸ்முல்ல நோக்கி பயணித்த தனியார் பேருந்தின் சாரதி, நடத்துநர் மீது வவுனியா நகரில் இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா நகரின் பூட் சிற்றிக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து மாலை பயணத்தினை ஆரம்பித்த குறித்த தனியார் பேருந்து இரவு 8.20 மணியளவில் நகரின் பூட்சிற்றிக்கு முன்பாக தரித்து நின்ற சமயத்தில், வேறு வாகனம் ஒன்றில் வருகை தந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டதுடன், பின்னர் குறித்த பேருந்து அங்கிருந்து பயணிகளுடன் பயணத்தினை தொடர்ந்தது. (5-4-250)



குருகுல பிதா வேலுப்பிள்ளை கதிரவேலுவின் (அப்பு) நினைவு தினம் நேற்று முன்தினம் கிளி நொச்சி மகாதேவா சுவாமி கள் சிறுவர் இல்லத்தின் தலைவர் ச. மோகனபவன் தலைமையில் இடம் பெற்றது. (5)

# மழை வேண்டி இளநீர் அபிஷேகம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடம் காலபோக நெற்செய்கையை விவசாயிகள் ஆரம்பித்துள்ள போதும் பருவமழை இன்மையால் விவசாயிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக மழையை எதிர்பார்த்து விவசாயிகள் நெல்லை விதைத்து ஒரு மாதம் கடந்துள்ளபோதும் மழையின்மையால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் இம்முறை சுமார் 72 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர். அதிகளவு விவசாயிகள் மழையை நம்பியே காலபோக செய்கையை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் மழை வேண்டி இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாளுக்கு இருநூறுக்கு மேற்பட்ட இளநீர் கொண்டு அபிஷேகம் மேற்கொண்டனர். (5-4-316-281-350)

# இராசிபலன்

27.10.2020
ஐப்பசி 11, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 1.41 மணிவரை
சதயம் முற்பகல் 10.00 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
சந்திராஷ்டமம் -ஆயிலியம்
ஏகாதசி விரதம் வளவன்

**மேஷம்**: எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**: வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பகையொன்று நட்பாகலாம், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.

**கடகம்**: மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்**: செய்தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு பெருகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்**: சிந்தனை மிகுதியான நாள், பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**மீனம்**: தூரதேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், வரம்தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

உன் மனதைக் கட்டுப்படுத்துவதே உண்மையான தவம்

# கொரோனாவால் மீன்பிடி சமூகம் பாதிப்பு மீன்களை விற்க ஏற்பாடு செய்யுங்கள்

(கொழும்பு)

மீன்பிடியுடன் தொடர்புபட்டு கொரோனா வைரஸ் தொற்று பரவிச் செல்லும் நிலை காரணமாக மீன்பிடிச் சமூகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கைப் பொது மீனவர் சம்மேளனம் கவலை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே படகுகள் மற்றும் களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மீன்களை விற்க ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கையும் விடுத்துள்ளது.

அகில இலங்கைப் பொது மீனவர் சம்மேளன தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி மற்றும் பேருவளை மீன்பிடித்துறை முகத்தில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் கிலோகிராம் மீன்கள் விற்க முடியாமல் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 73 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு சிறுவர் பாதுகாப்பு குறித்தும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள 73 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு மாவட்டத்தின் 15 பொலிஸ் பிரிவுகளிலும் கம்பஹா மாவட்டத்திலும் குளியாப்பிட்டியில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் களுத்துறை மாவட்டத்தின் 3 பொலிஸ் பிரிவுகளிலும் வெல்லம்பிட்டி, கொத்தட்டுவ, முல்லேரியா மற்றும் வெலிகடை பொலிஸ் பிரிவுகளிலும் இவ்வாறு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திற்கு பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரையில் தொடர்ந்து அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கம்பஹா மாவட்டத்தில் பொதுமக்களுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நேற்றுக் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கடைகளில் குவிந்த மக்கள்



(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் பொதுமக்கள் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள நிலையில் அத்தியாவசிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக நேற்று காலை முதல் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்களை ஒரே நேரத்தில் ஒன்றுகூடுவதனை தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் ஒரே இடத்தில் குவிந்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-4)

# அதிகரிக்கும் பி.சி.ஆர்.

(கொழும்பு)

நாட்டில் 4 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.சோதனைகள் முடிவடைந்துள்ளதாக கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

கொரோனா பரவல் அதிகரித்து வருகின்ற நிலையில் நாளுக்கு நாள் பி.சி.ஆர்.பரிசோதனைகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# விசேட அதிரடிப்படையினர் 11 பேருக்கு தொற்று உறுதி முகாம்கள் முடக்கம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் விசேட அதிரடிப்படையினர் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

இதனால் ராஜகிரிய, களனி, களுபோவில பகுதிகளில் உள்ள விசேட அதிரடிப் படையினரின் முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நாரஹேன்பிட்டிய பொலிஸ் வைத்தியசாலை, சீதுவ பொலிஸ், மிரிஹான பொலிஸ் நிலையங்களில் பொலிஸார் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து பொலிஸ் தரப்பில் 345 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராகம வைத்தியசாலையில் ஆறு மாதக் குழந்தைக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்திலும் மீனவர்கள் இருவருக்கு கொரோனாத்தொற்று உறதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (நி-7)

# தபால் சேவைகளை இடைநிறுத்த தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக பல பகுதிகளுக்கான தபால் சேவைகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு தபால் திணைக்களம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து தபால் நிலையங்கள், காலியில் உள்ள பிரதான மற்றும் துணை தபால் நிலையங்கள், குளியாப்பிட்டிய தபால் நிலையம் மற்றும் குருநாகல் மாவட்டத்தின் சன நெருக்கடியான பகுதிகதிகளில் அமைந்துள்ள தபால் நிலையங்கள் மற்றும் பல முக்கிய, துணை தபால் நிலையங்களின் சேவைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களின் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படவுள்ளன.

அது மாத்திரமன்றி மத்திய தபால் பரிமாற்றம் மற்றும் தபால் திணைக்களத்தின் பொது மக்கள் சேவைகளும் நிறுத்தி வைக்கப்படவுள்ளன. (நி-7)

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

02


கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### ஜனநாயகக் கட்சி

ஜனநாயகக் கட்சி நவீன தாராளவாத சிந்தனைகளுக்கு ஆதரவானது. அரசின் தலையீடுகள், எல்லோருக்கும் சுகாதார வசதி கிடைக்கச் செய்தல், குறைந்த செலவில் கல்வி கிடைக்கச் செய்தல், சமூக நலத் திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் தொழில் சங்கங்கள் போன்றவற்றில் நம்பிக்கை கொண்ட கட்சி. பன்முக கலாசாரவாதம், மதச்சார்பின்மை, வாக்களிக்கும் உரிமைகள் மற்றும் சிறுபான்மை உரிமைகள் ஆகியவற்றையும் இக்கட்சி ஆதரிக்கிறது. பராக் ஒபாமா, பில் கிளின்டன், ஜிம்மி கார்ட்டர் உள்ளிட்டோர் இக்கட்சியின் புகழ்பெற்ற தலைவர்கள் ஆவர். ஜிம்மி கார்ட்டர், தற்போது வாழ்ந்திடும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளில் வயதில் முதிர்ந்தவராக உள்ளார். பராக் ஒபாமா, அமெரிக்காவின் 44வது ஜனாதிபதியும் இப்பதவி வகித்த முதல் ஆபிரிக்க அமெரிக்கரும் ஆவார். மற்றைய ஜனாதிபதிகள் அனைவரும் முழுக்க ஐரோப்பிய வம்சாவளியினர் ஆவர்.


### குடியரசுக் கட்சியில் புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதிகள் சிலர்



ஜோர்ஜ் டபிள்யூ புஷ்
2001-2009



றொனால்ட் றீகன்
1981- 1989



ரிச்சர்ட் நிக்சன்
1969-1974

### ஜனநாயகக் கட்சியில் புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதிகள் சிலர்



பராக் ஒபாமா
2009-2017



பில் கிளின்டன்
1993-2001



ஜிம்மி காட்டர்
1977-1981

### குடியரசுக் கட்சி

குடியரசுக் கட்சி அமெரிக்காவின் பழைமைவாத அரசியல் கட்சி ஆகும். சமீபத்திய ஆண்டுகளில் இக்கட்சி வரி குறைப்பு, துப்பாக்கி உரிமைகள் மற்றும் குடியேற்றத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டது. எப்போதுமே அமெரிக்காவின் கிராமப்புறங்களில் உள்ள மக்களிடம் குடியரசுக் கட்சிக்கான ஆதரவு வலுவாக இருக்கும். ஜோர்ஜ் டபிள்யூ புஷ், றொனால்ட் ரீகன் மற்றும் ரிச்சர்ட் நிக்சன் ஆகியோர் இக்கட்சியில் புகழ்பெற்ற தலைவர்கள் ஆவர். ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது ஜோர்ஜ் புஷ் ஆட்சியில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்கள் தான் கடந்த 160 ஆண்டுகளுக்கு மேல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்களில் வெற்றி பெற்று வருகின்றனர். அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் கொடி வைத்துக் கொள்ள அனுமதி கிடையாது. ஜனநாயகக் கட்சியின் சின்னம் கழுதை. யானையை சின்னமாக குடியரசுக் கட்சி கொண்டுள்ளது.

குடியரசு கட்சியின் சின்னம் யானை

ஜனநாயக கட்சியின் சின்னம் கழுதை

இந்த இரு கட்சிகளையும் தாண்டி சுதந்திரக் கட்சி (லிபரட்டேரியன்), கிரீன் பார்ட்டி என்ற கட்சிகளும் உண்டு. ஆனால் இந்தக்கட்சிகள் அதிக வாக்குகளைப் பெறுவதில்லை. 1971ஆம் ஆண்டு லிபரட்டேரியன் கட்சி தொடங்கப்பட்டது. ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சிகளுக்கு அடுத்தாற்போல், தேசிய அளவில் இருக்கும் 3ஆவது பெரிய கட்சியாகும். இது வரை நாடாளுமன்றத்தில் ஒரு இடத்தைக்கூட பெற முடியவில்லை. பெரும்பாலும் மாநில அரசியலில் தான் ஆதிக்கம் செலுத்துகிறது. கடந்த 2001ஆம் ஆண்டில் க்ரீன் கட்சி (Green Party) ஆரம்பிக்கப்பட்டது. இது எக்கோ சோசலிஸ்ட் கட்சியென்றும் அழைக்கப்படுகிறது. இதைவிட தேர்தல் சமயத்தில் சில சிறிய கட்சிகள் தேர்தலில் கலந்து கொண்டாலும் அவை பெயரளவில்தான் அரசியல் கட்சிகள். தேர்தல் முடிந்த பிறகு இவை இருக்கும் இடம் தெரியாது.

**அமெரிக்காவில் பல அரசியல் கட்சிகள் இருந்தாலும் இங்கு பெரும்பாலான வாக்காளர்கள் ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். மற்றக் கட்சிகள் பெயரளவில்தான். அவ் அரசியல் கட்சிகள். தேர்தல்முடிந்த பிறகு இருக்கும் இடம் தெரியாது போய்விடும்.**

### அமெரிக்காவில் வாக்காளர் பதிவு வாக்காளராக பதிவு செய்தல்

வாக்காளர் பதிவை மேற்கொள்ளல் முறை நாட்டுக்கு நாடு வேறுபட்டது. பெரும்பாலான நாடுகளில், வாக்களித்தல் மற்றும் பதிவு செய்வது விருப்பத்துக்குரியது. சில நாடுகளில் (அவுஸ்திரேலியா போன்றவை) பதிவுசெய்தல் மற்றும் வாக்களிப்பு ஆகியவை வாக்களிக்கும் வயது வந்த குடிமக்களுக்கு கட்டாயமாகும்.

வாக்காளர் பதிவில் இரண்டு முக்கிய முறைகள் உள்ளன. ஒன்று ஒருவர் தானாக (self-initiated) நடவடிக்கை எடுத்து பதிவை மேற்கொள்ளல். மற்றையது அரசினால் நடவடிக்கை (State-initiated) எடுக்கப்பட்டு ஒருவரின் வாக்காளர் பதிவை மேற்கொள்ளல். சுயமாக தொடங்கப்பட்ட முறையில் (self-initiated) வாக்காளர்கள் முன் முயற்சி எடுத்து வாக்களிக்க தங்களை பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு தேர்தலுக்கும் வாக்காளர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பது நாட்டைப் பொறுத்து இருக்கும். அரசினால் நடவடிக்கை (State-initiated) எடுக்கப்பட்டு ஒருவரின் வாக்காளர் பதிவை மேற்கொள்ளும் முறையில் தகுதிபெற்ற அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனரா? என்பதை உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் வாக்காளர்களின் பெயர்களை பதிவுசெய்யும் முறையுடன் ஒப்பிடும் போது அமெரிக்காவில் வாக்காளர்களின் பெயர்களை பதிவுசெய்யும் முறை முற்றிலும் வேறுபட்டது. அதாவது இலங்கையில் அரசினால் நடவடிக்கை (State-initiated) எடுக்கப்பட்டு ஒருவரின் வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவில் ஒருவர் தானாக (self-initiated) நடவடிக்கை எடுத்து பதிவை மேற்கொள்ளல் வேண்டும்.

**இலங்கையில் வாக்காளர்களின் பெயர்களை பதிவுசெய்யும் முறையுடன் ஒப்பிடும் போது அமெரிக்காவில் வாக்காளர்களின் பெயர்களை பதிவுசெய்யும் முறை முற்றிலும் வேறுபட்டது. அதாவது இலங்கையில் அரசினால் நடவடிக்கை (State-initiated) எடுக்கப்பட்டு ஒருவரின் வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவில் ஒருவர் தானாக (self-initiated) நடவடிக்கை எடுத்து பதிவை மேற்கொள்ளல் வேண்டும்.**

இலங்கையில் ஜூன் மாதத்திலும் அமெரிக்காவில் செப்டெம்பர் மாதத்திலும் வாக்காளர் தினங்கள் உள்ளன.

அமெரிக்காவில் சில மாநிலங்களில் வருடாந்த பதிவுகள் மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒருவரின் பெயரையும் முகவரியையும் தற்போதையதாக வைத்திருக்கும் வரை அவரது வாக்காளர் பதிவு நிரந்தரமானது. முன்னர் வாக்காளராக பதிவு செய்த ஒருவர் வரப்போகும் ஒரு தேர்தலுக்கு தனக்கு வாக்குரிமை உள்ளதா? இல்லையா? என்பதை இணையத்தில் நிகழ்நிலையில்(Online) பார்த்து தெரிந்து கொள்ளமுடியும். அல்லது குறிப்பிட்ட அலுவலகத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடியும். வாக்குரிமை இல்லாவிடில் அவர் தன்னை மீள்பதிவு அல்லது பதிவில் திருத்தம் செய்து கொள்ளலாம்.

அமெரிக்காவில் சட்டபூர்வ வாக்களிக்கும் வயது 18 ஆகும். வாக்காளர் பதிவு, பதிவுக்கு உரிய விதிகள் மற்றும் வாக்காளர் பதிவு வயது என்பன மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன.

(தொடரும்...)

# இரண்டாவது அலைக்கான காரணம் கண்டறியப்பட்டதாம்

## கூறுகிறது புலனாய்வுப் பிரிவு

(கொழும்பு)

**நாட்டில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை ஏற்படுவதற்கு துருக்கியிலிருந்து வந்தவர்களே காரணம் என புலனாய்வுப்பிரிவினரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.**

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட இரண்டாவது அலையின் ஆரம்பம் குறித்து தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

துருக்கியில்இருந்து இலங்கை வந்த உக்ரேன் விமான ஊழியர்களால் வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளதென புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அரசாங்க புலனாய்வு பிரிவின் அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட பாதுகாப்பு பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த யுக்ரேன் விமான ஊழியர்கள் கடந்த செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி நாட்டில் வந்துள்ளனர். இந்த குழுவில் 11 பேர் இருந்துள்ளனர். அவர்கள் சீதுவ பிரதேசத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். விமான ஊழியர்கள் தனிமைப் படுத்தப்படும் போது ஹோட்டல் ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.


தனிமைப்படுத்தப்பட்ட விமான ஊழியரான உக்ரேன் நாட்டவர் ஒருவர் கடந்த மாதம் 13 ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஏனைய விமான ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் பி.சி.ஆர்.பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர். ஹோட்டல் ஊழியர்கள் 60 பேரில் 8 பேர் தினமும் வீடுகளுக்கு சென்று பணிக்கு வந்துள்ளவர்களாகும். அந்த 18 பேர் கடந்த 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை வீடுகளில் இருந்து பணிக்கு சென்றுள்ளனர்.

ஹோட்டல் ஊழியர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் ஹோட்டல் நிர்வாகத்தினர் கொரோனா சட்டதிட்டத்தை கருத்திற்கொள்ளாமல் ஊழியர்களை வீட்டிற்கு அனுப்புவதற்கு வாய்ப்பளித்துள்ளனர். வீடுகளுக்கு தினமும் சென்ற 5 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய நிலையில் அவர்களில் மூவர் பணிக்குச் சென்றுள்ளனர்.

இந்த குழுவினரை சோதனையிடும் போது நாட்டில் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளிடம் கொரோனா அளவை விடவும் அதிகம் திறன் கொண்ட வைரஸ் உடலில் இருந்தமை உறுதியாகியுள்ளது.

பின்னர் இந்த வைரஸ் உடலில் நூற்றுக்கு 15-18 வீதமான அளவே காணப்பட்டது. எனினும் இவர்களிடம் 29 - 31 வீதம் காணப்பட்டுள்ளது. இது புதிய நிலைமையாகும். பிராண்டிக்ஸ் நோயாளியின் உடலில் 29 - 31 வீதம் வைரஸ் காணப்பட்டுள்ளது. குறித்த உக்ரேன் நாட்டவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் ஊழியர் ஒருவர் பிராண்டிக்ஸ் ஊழியருடன் தொடர்பில் இருந்ததாக விசாரணைகளில் உறுதியாகியுள்ளது என விசாரணை நடத்திய சிரேஷ்ட அதிகாரி உறுதி செய்துள்ளார். (ஐ-4)



# தௌஹீத் ஜமாத் அமைப்பிடமிருந்து சஹ்ரானுக்கு 5 மில்லியன் ரூபா பணம்

(கொழும்பு)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கு சொந்தமான வங்கிக்கணக்கில் 54 இலட்சம் ரூபா பணம் வைப்பில் இடப்பட்டமை குறித்து தௌஹீத் ஜமாத் அமைப்பின் பொருளாளராக செயற்பட்ட மொஹமட் யூசுப் மொஹமட் தௌபிக் மௌலவி ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளால் அந்த மௌலவி கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போது அவர் மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

மேலும் சாட்சியம் அளித்த அவர், சங்ரில்லா ஹோட்டலில் தாக்குதல் நடத்தியவர் சஹ்ரான் ஹாசீம் எனவும் அதனை அவருடைய தலையின் மூலம் அடையாளம் கண்டுகொண்டதாகவும் அவர் கூறியுள்ளார். குறித்த சாட்சியத்தின் கேள்விகளும் பதில்களும் கீழ்வருமாறு,

**கேள்வி:-** நீங்கள் சஹ்ரானின் பள்ளியில் சம்பளம் வாங்குபவராக செயற்பட்டீர்களா?

**பதில்:-** ஆம். ஒரு மௌலவியாக என்னைக் குறித்த பள்ளிவாசலில் இஸ்லாத்தை கற்பிக்குமாறு சஹ்ரான் ஹாசீம் அழைத்தார். அதற்கமைய நான் 2014 ஆம் ஆண்டு சம்பளம் பெறும் ஊழியனாக காத்தான்குடியில் உள்ள தௌஹீத் ஜமாத் அமைப்பின் பள்ளிவாசலுடன் சம்பந்தப்பட்டு கடமையாற்றினேன்.

**கேள்வி:-** உங்களுடையதும், முஸ்தாகி என்பவருடையதுமான தௌஹீத் ஜமாத் அமைப்புக்குச் சொந்தமான வங்கிக் கணக்கில் 5,484,000 (54 இலட்சத்து 84 ஆயிரம்) ரூபா பணத்தை சஹ்ரானுக்கு வழங்கினீர்களா?

**பதில்:-** நானும் இன்னொரு நபரும் பணத்தைப் பெறகையை முத்திட்டோம். பொருளாளராக அவர் சஹ்ரானுக்கு பணம் வழங்கினாரா? என்பது தெரியாது.

**கேள்வி:-** அந்த பணம் எதற்காக பயன்படுத்தப்பட்டது?

**பதில்:-** அந்த பணம் பள்ளிவாசல் அமைக்க பயன்பட்டது.

**கேள்வி:-** 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதியன்று தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது நீங்கள் எங்கு இருந்தீர்கள்?

**பதில்:-** அப்போது நான் பள்ளியில் இருந்தேன்.

**கேள்வி:-** சஹ்ரானை இறுதியாக நீங்கள் எப்போது சந்தித்தீர்கள்?

**பதில்:-** 2017 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி காத்தான்குடியில் அல்லியார் சந்தியில் இடம்பெற்ற மோதலின் பின்னர் சஹ்ரானை காணவில்லை எனவும், தொலைபேசியிலும் உரையாடவில்லை.

**கேள்வி:-** நீங்கள் எப்போது கைது செய்யப்பட்டீர்கள்?

**பதில்:-** தாக்குதல் நடந்த இரண்டு நாட்களில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் வீட்டுக்கு வந்து சஹ்ரானின் தலையை அடையாளம் காட்ட முடியுமா? எனக் கேட்டனர். அதற்கமைய நான் அவரின் தலை என்பதை அடையாளம் கண்டேன்.

அதனையடுத்து ஏப்ரல் 28 ஆம் திகதி நான் கைது செய்யப்பட்டேன். (ஐ)

# மக்களுக்கு சேவையாற்றவே '20'ற்கு ஆதரவளித்தேன்

(கொழும்பு)

மக்களுக்கு சேவையாற்றுவதனை நோக்காக கொண்டே 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.



பொதுஜன முன்னணி அரசாங்கம் எதிர்வரும் 10.15 வருடங்களுக்கு ஆட்சியில் இருக்கும் என எதிர்பார்க்கலாம் இவ்வாறு இருக்கும் போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்கள் நலன்சார் விடயங்களை முன்னெடுக்க முடியாது.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு வெறுமனே கொள்ளை அரசில் பேசிக்கொண்டிருக்க முடியாது. கடந்த தேர்தல் காலத்தில் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளேன். அவ்வாறு வழங்கப்பட்ட உறுதிமொழியை காப்பாற்ற வேண்டிய தேவையும், அவசியமும் உள்ளது.

இதனை எதிர்க்கட்சியில் இருந்து நிறைவேற்ற முடியாது. ஆகவே மக்களுக்கு சேவையாற்றுவதனை முதன்மை நோக்காக கொண்டு இருபதுக்கு ஆதரவளித்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## இருவர் கைது



(கொழும்பு)

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பிற்கு ஆட்டோவில் ஒரு கிலோ கேரள கஞ்சாவை கடத்திச் சென்ற இருவரை வாகரையில் வைத்து பொலிஸார் நேற்று பிற்பகல் கைது செய்துள்ளதுடன் ஆட்டோ ஒன்றையும் மீட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரி வித்தனர். (ஐ-4)

# பாரதம்

## அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம்



(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக்கேல் பொம்பியோ அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் பங்கேற்க இந்தியாவுக்கு புறப்பட்டுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சராக இருப்பவர் மைக்கேல் பொம்பியோ. டில்லியில் நடைபெறவுள்ள அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் இந்தியாவுக்கு புறப்பட்டார்.

அவருடன் பாதுகாப்பு செயலாளர் மார்க் டி எஸ்பர் பயணம் மேற்கொள்கிறார்.

இந்த சுற்றுப்பயணத்தில் அவர் இலங்கை, மாலைதீவுகள் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணம் செய்ய இருக்கிறார்.

இந்த பயணத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அச்சுறுத்தல்களை முறியடிக்க சுதந்திர நாடுகள் எப்படி இணைந்து பணியாற்ற முடியும் என்று ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

நவம்பர் 3 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அவரது இந்தச் சுற்றுப்பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. (நி)

## மத்திய கிழக்கு நாடுகளில் பிரான்ஸ் பொருட்களை புறக்கணிக்க அழைப்பு

(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மத்திய கிழக்கு நாடுகளில் பிரான்ஸ் பொருட்களை புறக்கணிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, குவைத், ஜோர்தான் மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகளிலுள்ள சில அங்காடிகளில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பொருட்கள் நீக்கப்பட்டுள்ளன.

அதேநேரத்தில், பிரான்ஸ் ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து லிபியா, சிரியா, காசாவில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இந்த நிலையில், பிரான்ஸ் பொருட்களை புறக்கணிக்கும் முடிவை மத்திய கிழக்கு நாடுகள் கைவிட வேண்டுமென்று பிரான்ஸ் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

பிரான்ஸ் பொருட்களை புறக்கணிக்கும் அடிப்படை அற்ற அழைப்புகள் ஒரு தீவிர சிறுபான்மை குழுவால் மேற்கொள்ளப்படுவதாக பிரான்ஸின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முகமது நபியின் சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரத்தை வகுப்பறையில் காட்டிய காரணத்திற்காக, பிரான்ஸில் கடந்த ஒக்டோபர் 16 ஆம் திகதி வரலாற்று விரிவுரையாளரான 47 வயதான சாமுவேல் பேட்டி என்பவர், இளைஞனொருவரால் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்தினால் ஆத்திரமடைந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன், இஸ்லாமியவாதிகள் நமது எதிர்காலத்தை பறிக்க நினைப்பதால் ஆசிரியர் சாமுவேல் பேட்டி கொல்லப்பட்டார். ஆனால் பிரான்ஸ் கேலிச்சித்திரங்களை ஒருபோதும் விட்டுக்கொடுக்காது' என கூறினார். இந்த பின்னணியிலேயே இந்த புறக்கணிப்புகள் இடம்பெற்று வருகின்றன. (நி)

## பயங்கரவாத பட்டியலில் இருந்த அபுமுஹ்சின் அல்மஸ்ரி உயிரிழப்பு


### உறுதிப்படுத்தியது பாதுகாப்பு பணியகம்

(காபூல்)

பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்த அல்கொய்தாவின் மூத்த தலைவரான அபுமுஹ்சின் அல்மஸ்ரி உயிரிழந்துள்ளார்.

அமெரிக்க படையினரால் தேடப்படும் நபராக அறியப்பட்ட இவர் ஆப்கான் சிறப்பு படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக ஆப்கானிய தேசிய பாதுகாப்பு பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அல்-கொய்தாவின் இரண்டாவது தளபதி என்று நம்பப்படும் எகிப்திய நாட்டைச் சேர்ந்த அல்மஸ்ரி, ஆப்கானின், மத்திய காஸ்னி மாகாணத்தில் நடந்த ஒரு சிறப்பு நடவடிக்கை




யின் போது கொல்லப்பட்டார் என்று ஆப்கானிஸ்தானின் தேசிய பாதுகாப்பு பணியகம் கடந்த சனிக்கிழமை தாமதமாக வெளியிட்ட ஒரு டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் அமெரிக்க தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் தலைவர் கிறிஸ் மில்லர் ஒரு அறிக்கையில் அல் மஸ்ரியின் மரணத்தை உறுதிப்படுத்தினார்.

ஹுசாம் அப்துல்-ரவுஃப் என்ற பெயரில் அழைக்கப்படும் அல் மஸ்ரி மீது, அமெரிக்காவில் ஒரு வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பிற்கு ஆதரவையும் வளங்களையும் வழங்கிய தாகவும் அமெரிக்க நாட்டினரைக் கொல்ல சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவரை கைது செய்ய அமெரிக்கா 2018 டிசெம்பரில் பிடியாணை பிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## ஏழை நாடுகள் கொரோன
## அனைத்து நாடுகளும் உ



(ஜெனிவா)

ஏழை நாடுகள் கொரோனா தொற்றுக்கான தடுப்பூசியை பெறுவதை அனைத்து நாடுகளும் உறுதி செய்வது மட்டுமே உலகம் கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டு வருவதற்கான ஒரே வழி என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

பெர்லினில் நடைபெற்று வரும் உலக சுகாதார மூன்று நாள் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

## ஆப்கானில் தற்கொலை
## மாணவர்கள் உட்பட 2

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலிலுள்ள ஒரு கல்வி நிலையத்தில் நடந்த தற்கொலை குண்டு தாக்குதலில் கடந்த சனிக்கிழமை மாணவர்கள் உட்பட 24 பேர் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள் 15 முதல் 26 வயதுக்குட்பட்ட மாணவர்



கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## அஸர்பைஜான்-ஆர்மீனி
## இரு நாடுகளையும்

(மொஸ்கோ)

அஸர்பைஜான் மற்றும் ஆர்மீனியாவுக்கு இடையே மீண்டும் போர் தொடர்வதால் ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இருநாடுகளுக்கும் நடுவே உள்ள நாகோர்னோ, காரபாக் பகுதிக்காக இரு நாடுகளும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களுக்கு அமைதி உடன்படிக்கை ஏற்பட்ட போதிலும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருவதால் போர் மீண்டும் தொடர்ந்து வருகிறது.

அஸர்பைஜான் படைகள்

# வெளிநாடு

## ரானா தடுப்பூசி பெறுவதை
## உறுதி செய்ய வேண்டும்

உலகம் முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது 4 கோடியை கடந்துள்ளது. இந்நிலையில் தொற்றை ஒழிப்பதற்கு சர்வதேச நாடுகளின் முழு ஒத்துழைப்பு அவசியமாகிறது.

ஏழை நாடுகள் கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசியை பெறுவதை அனைத்து நாடுகளும் உறுதி செய்வது மட்டுமே உலகம் கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டு வருவதற்கான ஒரே வழியாகும்.

அனைத்து நாடுகளும் தங்களின் குடிமக்களை பாதுகாக்க நினைப்பது இயற்கையான ஒன்று. எனவே வீரியமான தடுப்பூசி கண்டுபிடிக்கப்படுமாயின் அதனை அனைத்து நாடுகளுக்கும் தடையின்றி விநியோகிக்க வேண்டும்.

நான் ஒன்றை தெளிவாக சொல்கிறேன். தடுப்பூசியை தேசியவாதமாக மாற்றுவதன் மூலம் நிச்சயம் கொரோனாத் தொற்றினை ஒழிக்க முடியாது என்றார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான் மற்றும் பிற நாடுகளின் ஒரு பகுதியினர் ஏற்கனவே மிகவும் நம்பிக்கைக்குரிய தடுப்பூசிகளை உருவாக்கும் நிறுவனங்களுடன் பெரிய கொள்வனவு செய்ய முன்பதிவு செய்துள்ளனர்.

ஆனால் சிறிய மற்றும் ஏழை நாடுகள் இது குறித்து பெரிதும் கவலை கொள்ளாமல் இருப்பது பெரும் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## மீண்டும் வெறுமையானது இத்தாலி



(ரோம்)

இத்தாலியில் மீண்டும் கொரோனாத் தொற்று வீரியம் அடைந்துள்ள நிலையில் அந்நாட்டில் இரவு 11 மணி முதல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இத்தாலியின் தலைநகரான மிலனின் வீதிகள் மீண்டும் வெறிச்சோடி காணப்படுகின்றன.

நாட்டில் கொரோனா தொற்று வழக்குகள் அதிகரிக்கும் போது இத்தாலியின் கொவிட் கட்டுப்பாட்டு மையம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அந்நாட்டில் கடந்த வியாழக்கிழமை 4,100 இற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் வட பிராந்தியத்தில் மீண்டும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அத்துடன், நேற்று முன்தினம் இத்தாலியில் 19,644 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் 151 பேர் உயிரிழந்தும் உள்ளனர்.

இந்நிலையில் இத்தாலியின் கொரோனாத் தொற்று நோயின் முதல் அலை ஏற்பட்டு ஏழு மாதங்களுக்குப் பிறகு, மீண்டும் புதிய விதிகள் நடைமுறைக்கு வந்துள்ளன. இந்நிலையில் மிலனின் டியோமோ கதீட்ரலுக்கு முன்னால் உள்ள சதுரம் மீண்டும் வெறுமையடைந்துள்ளது.

ஏனைய பகுதிகளை விட இத்தாலியின் வடக்கு பிராந்தியத்தில் அதிகமான தீவிர சிகிச்சை நோயாளிகள் உள்ளனர். இந் நெருக்கடியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக இரவு 11 மணி முதல் அதிகாலை 5 மணி வரை தேவையற்ற பயணங்களை இத்தாலி அரசு தடை செய்துள்ளது. (நி)

## லை குண்டுத் தாக்குதல்
## ட 24 பேர் உயிரிழப்பு!



அத்தோடு இந்த தாக்குதலில் 57 பேர் காயமடைந்ததாக உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த தாக்குதலுக்கான பொறுப்பினை தலிபான்கள் மறுத்துள்ளதாக தலிபான்களின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளதாகவும் சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கொத்துக் கொத்தாக இறந்து கிடக்கும் 'சீல்கள்'



(ஜோகன்னஸ்பர்க்)

நமீபியா கடற்கரைகளில் சீல்கள் கொத்துக்கொத்தாக இறந்து கிடந்தது விலங்கியல் ஆர்வலர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

ஆபிரிக்க நாடான நமீபியாவில் உள்ள கடற்கரையில் ஆங்காங்கே சீல்கள் கொத்துக் கொத்தாக இறந்து கிடக்கின்றன.

வெல்விஸ் வளைகுடா நகரின் அருகே பெலிகன் பாயின்ட் கடற்கரைகளில் செப்டெம்பர் மாதம் சில சீல்கள் இறந்து கிடந்தது முதலில் கண்டறியப்பட்டது.

அதன்பின்னர் ஒக்டோபர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் அதிக அளவில் சீல்கள் இறந்துள்ளன. சுமார் 7000 சீல்கள் வரை இறந்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

சீல்கள் கொத்துக் கொத்தாக இறப்பது விலங்கியல் ஆர்வலர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

இதுகுறித்து ஓசியன் கன்சர்வேசன் அமைப்பினர் நடத்திய ஆய்வில் சீல்கள் விரும்பி உண்ணும் மீன்கள் குறிப்பிட்ட பகுதியில் இடம் பெயர்வதால் இந்த அவல நிலை ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இறந்த சீல்களின் மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (நி)

## னியா மீண்டும் மோதல்
## ம் எச்சரிக்கும் ரஷ்யா

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் குடியேற்றங்கள்மீது ஷெல்தாக்குதல்மேற்கொண்டதாக ஆர்மீனியா குற்றம் சாட்டியது.

அதேநேரம், அஸர்பைஜான் படைகள் இரவில் அஸ்கெரான் மற்றும் மார்டுனியில் குடியேற்றங்கள் மீது பீரங்கிகளை வீசியதாக நாகோர்னோ-கராபாக் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.


இந்த நிலையில் இருநாடுகளுக்கு இடையே மோதல் தொடர்வதால் நட்பு நாடுகளுடன் உறவு மோசமாகும் என ரஷ்யா எச்சரித்துள்ளது. (நி)

# புலிகள் மீதான தடையை பிரிட்டன் நீக்காது

## - கெஹலிய நம்பிக்கை -

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் அரசு தடை செய்தது தவறு என்று பிரிட்டனில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான விசேட ஆணையம் தீர்ப்பு வழங்கியிருந்தாலும் அதைப் பிரிட்டன் அரசு நடைமுறைக்குக் கொண்டு வரும் என்று நாம் நம்பவில்லை**



இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "வெளிநாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைப் பட்டியலிலிருந்து நீக்கினாலும் இலங்கை அரசு ஒருபோதும் அதைச் செய்யவே மாட்டாது. நாட்டில் மீண்டும் ஒரு போரை - இரத்தக்களரியை நாம் விரும்பவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மோசமான பயங்கரவாத அமைப்பு. இதை வெளிநாடுகள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அந்த அமைப்பை இலங்கையில் நாம் இல்லாதொழித்தாலும் குறித்த அமைப்பைச் சேர்ந்த சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் கோரி அரசியல் நடத்துகின்றனர். அவர்கள் தொடர்பில் வெளிநாட்டு அரசுகள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# அரவிந்தகுமாருக்கு தற்காலிக தடை

(ஹற்றன்)

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாருக்கு தற்காலிக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

20ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக அவருக்கு 14 நாட்கள் அவகாசம் வழங்குவதற்கும் அவர் வழங்கும் பதிலின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நுவரெலியா ஹற்றனில் நடைபெற்றது. கூட்டம் முடிவடைந்த பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, "அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதென மலையக மக்கள் முன்னணி அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்திருந்தது. இந்நிலையில் இம்முடிவைமீறி சட்டமூலத்துக்கு ஆதரவாக அரவிந்தகுமார் வாக்களித்தது தொடர்பில் மத்தியகுழு கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அரவிந்தகுமாரிடம் விளக்கம் கோருவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. 14 நாட்களுக்குள் அவர் உரிய விளக்கத்தை முன்வைக்கவேண்டும். மத்திய செயற்குழுவின் இந்த முடிவு செயலாளர் ஊடாக அரவிந்தகுமாருக்கு அனுப்பி வைக்கப்படும்.

14 நாட்களுக்கு பின்னர் மத்திய குழுவும், சபையும் மீண்டும் கூடும். அவர் விளக்கமளித்திருக்கும் பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதுவரையில் மலையக மக்கள் முன்னணி, மலையக தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளில் அவர் ஈடுபடக்கூடாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளுக்கு தனிப்பட்ட நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆனால் கட்சி, கட்டமைப்பு என வரும்போது கூட்டாக எடுக்கும் முடிவை எடுத்ததாக இருக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

# 50 அடி பள்ளத்தில் வீழ்ந்த ஆட்டோ ஆசிரியர்கள் நால்வர் படுகாயம்

(தலவாக்கலை)

தலவாக்கலை லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை- டயகம பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 பேர் படுகாயமடைந்து லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லிந்துலை நாகசேனை பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த ஆட்டோ ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த சாரதி உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளைலிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். குறித்த வாகனத்தில் பயணித்த நால்வரும் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நன்மையும் தீமையும்

ஒருத்தர் நமக்கு நல்லது செய்கின்றார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை நாங்கள் நீண்ட நாள் நினைத்துக் கொண்டிருப்பதில்லை. ஆனால் அவரே ஒரு கெடுதல் செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அவ்வளவு சுலபமாக மறந்து விட மாட்டோம். எப்போது பழிவாங்கலாம் என்று பார்த்துக்கொண்டிருப்போம். சுவாமி சிவானந்தர் ஒரு கதை சொல்லி இதை விளங்க வைக்கிறார்.

ஒரு கிராமத்திலே ஒரு ஆள் இருந்தான். விவசாயம் தான் தொழில். அவனுக்கு ஒரு பிள்ளை. ஒரே பிள்ளை என்பதனால் மிகவும் பிரியம். ஒரு நாள் அந்தப் பிள்ளையை பாம்பு கடித்து விட்டது. இறந்து விட்டான். மகனை இழந்து விட்டோம் என்று தெரிந்ததும் அவனுக்கு பயங்கர கோபம் அந்த பாம்பு மேலே. உடனே ஒரு கோடரியை கையில் எடுத்தான். அந்த பாம்பை தேடிப் பிடித்து ஓங்கி ஒரு போடு போட்டான். அவ்வளவு தான் அந்த பாம்பின் வால் துண்டாக போய்விட்டது.

வால் மட்டும் துண்டாகி விட பாம்பு ஓடி விட்டது. அதற்குப் பிறகு ஒரு பயம் உண்டாகி விட்டது.அடி பட்ட பாம்பு நம்மைப் பழிவாங்கி விடுமோ என்ற பயம். சிறிது நாள் ஆகிவிட்டது. இப்படிப் பயந்து கொண்டே எத்தனை நாள் இருக்கிறது. அந்த பாம்புடன் பேசி சமரசம் செய்யலாம் என்று முடிவு செய்து உடனே ஒரு கோப்பையில் பால் கொண்டு போய் பாம்பு புற்றுக்கு அருகில் வைத்தான். பாம்பு வெளியே வந்தது. இவன் விபரத்தை சொன்னான். அப்பொழுது அந்த பாம்பு கூறியது இதோ பார் இனிமேல் நாங்கள் நண்பர்கள் ஆவது முடியாத காரியம். நான் உன்னை பார்க்கின்ற போதெல்லாம் அல்லது உன்னை நினைக்கின்ற போதெல்லாம் என்னுடைய அறுபட்ட வால் தான் ஞாபகத்திற்கு வரும். அது போல நீ என்னை பற்றி நினைக்கின்ற போதெல்லாம் இறந்து போன உன்னுடைய நினைப்பு தான் வரும்.

ஒருவர் நமக்கு செய்யும் தீமை நம் மனதிலே ஆழமாக பதிந்து விடும். பழிவாங்கும் சுபாவம் தலைதூக்கி நிற்கும் இப்படி சொல்லிவிட்டு அந்த பாம்பு புற்றுக்குள் போய்விட்டது.

பொதுவாக உலக இயல்பு இது. மற்றவர்கள் நமக்கு செய்த நல்லவைகள் எல்லாம் நாங்கள் சுலபமாக மறந்து விடுகிறோம். ஆனால் அவர்கள் செய்த தீமைகள் நம்முடைய மனதிலே ஆழமாக பதிந்து விடுகிறது. அதுமட்டுமல்ல பழிவாங்கும் தருணத்தை மனம் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும். இதனால் என்ன ஆகுவது.

மனதிலே அமைதி இல்லை, எப்போதும் பயந்து பயந்து வாழ்கின்றோம், அதனாலே வாழ்க்கையிலே மகிழ்ச்சியும் மன அமைதியும் வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் அடுத்தவர்கள் செய்த தீமைகளை மறந்து விட வேண்டும். நன்மைகளை மறந்து விடவே கூடாது. எப்பவும் ஞாபகத்திலே வைத்திருக்க வேண்டும். எங்களில் சில பேர் பழிவாங்கும் விதமே தனி. ஒருத்தன் இன்னொருத்தனை அடித்துக் கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த ஒருத்தர் ஏன்டா அவனை போட்டு இப்படி அடிக்கின்றாய் என்று கேட்டார். இவனை பழிவாங்கிக்கொண்டிருக்கின்றேன் என்றான் அவன். எதற்கு பழிவாங்குகின்றாய் என்றார். இவன் என் முகத்தைப் பார்த்து தேவாங்கு என்று சொல்லிவிட்டான் என்றான். எப்போது திட்டினான் என்று கேட்டார் அவர். 6 மாதத்திற்கு முன்பு என்றான். அதற்கு ஏன் இப்போது அடிக்கின்றாய் என்றார். நான் இன்று தான் நேரிலே தேவாங்கை பார்த்தேன் என்றான் அவன்.

# '19' '20' தமிழர்களுக்கு நன்மை இல்லை இருக்கு

**(கொழும்பு)**

**19ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் பெற்றுக்கொடுக்காத நிலையிலேயே 20 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.**



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு அரச வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான முதல் கட்ட நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பல சர்ச்சைகளுக்கு மத்தியில் 20 ஆவது திருத்த சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 19 ஆவது திருத்தச் சட்டம் சரியானது, அதைக் கொண்டு வரவேண்டும் என பலர் குரல் கொடுத்திருந்தனர்.

ஆனால் அது கொண்டு வரப்பட்ட பின்னர் தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக பல கேள்விகள் இருக்கின்றன.

19 ஆவது திருத்தச்சட்டம் மூலமும் ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய நல்லாட்சி காலத்தில் தான் உயிர்த்த ஞாயிறு படுகொலைத் தாக்குதல் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மறுக்கப்பட்டது, நிர்வாகம் மறுக்கப்பட்டது. இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில்தான் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர் வேலைக்குக்கூட பொலநறுவையிலிருந்து 381 பணியாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

மத்திய வங்கியில் பாரிய ஊழல் நடைபெற்றது. அது மாத்திரமல்ல தமிழர்களின் போராட்டத்தின்பால் இருக்கின்ற மாகாணசபை முறைமையை கூட நடத்த முடியாமல் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் நடத்த வேண்டிய மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாமல் இழுத்தடிக்கப்பட்டுள்ளது. நல்லாட்சியில் 19 ஆம் திருத்தச் சட்டமூலம் நடைமுறையிலிருந்த காலத்தில் தீர்க்கமான முடிவெடுக்கப்படாமையாகும்.

19 ஆவது திருத்தச்சட்டமானது தமிழர்களுக்கு எந்தவித நன்மையையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்ற அடிப்படையில் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தமிழர்களுக்கு சார்பான தமிழர்களின் நிலத்தினையும் நிர்வாகத்தினையும் பாதுகாக்கின்ற, தமிழர்களின் தனித்துவத்தை பாதுகாக்கின்ற அபிவிருத்திகளைக் கொண்டு வருகின்ற அனைத்து செயற்பாடுகளுக்கும் தொடர்ந்தும் கைகொடுத்து இந்த அரசாங்கத்துடன் இணக்க ஆட்சி நடத்தி எமது மக்களின் வறுமையை போக்கி அவர்களின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக நாங்கள் தொடர்ந்து பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## விசாரணைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தால் புதுக்கடையில் உள்ள உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவற்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த வழங்குகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டன. அதனடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் ஒருவார காலத்திற்கான அனைத்து வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இவ்வாறு ஒத்திவைப்பட்ட வழக்குகளின் விசாரணை தினம் குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## இறால் வாங்கியவருக்கு கொரோனா

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்திற்குட்பட்ட பகமுன பகுதியில் வடை விற்பனை கடை ஒன்றை நடத்தி வந்த நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பகமுன பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த நபர் கடந்த தினங்களில் இறால் வாங்குவதற்காக பேலியகொட மீன் சந்தைக்கு சென்றுள்ளார்.

அதனடிப்படையில் குறித்த நபருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

## "ஒரு பயணியின் டயரி" விமர்சனப் பார்வை

பயணங்கள் எப்போதும் பசுமையானவை. சிறுவர் முதல் முதியவர் வரை பயணத்தை விரும்பாதவர் எவருளர் .

பயணங்களிடையே பெற்றுக் கொண்ட அனுபவங்கள், அந்த அனுபவங்கள் நமக்கு தந்த பாடங்கள் எம்மையும் நம் வாழ்வையும் செழிமைப் படுத்தும் என்பது உண்மை.

சிறுவயதில் பாடசாலை நாட்களில் நாம் சென்ற பயணங்கள் எம் கண் முன்னே பசுமரத்து ஆணியாய் விரிந்து நிற்கும்.

பயணம் என்பது வெறும் மனத் திருப்தி, மன அமைதி, தெரியாததை தெரிந்து கொள்ளல், எமக்குக் கிடைக்கும் புதிய அனுபவம் எனப் பலதரப்பட்ட விடயங்களைச் சொல்லிக் கொண்டாலும் பயணங்கள் வாழ்க் கையை கற்றுத்தருகின்றன என்பதே உண்மையானது.

அந்த வகையில் வைத்திய கலாநிதி ஞா.பவானி அவர்களால் எழுதப்பட்ட "ஒரு பயணியின் டயரி" எனும் நூல் வெளிவந்துள்ளது.

"ஒரு பயணியின் டயரி" எனும் பெயரே அந்தப் புத்தகத்திற்குள் ஏதோ இருக்கின்றது எனும் எதிர்பார்ப்பை தூண்டி நிற்கின்றது.

வைத்திய கலாநிதி ஞா.பவானி தனது பயணத்தில் கிடைத்த அனுபவங்களையும் அற்புதங்களையும் நூல் வடிவில் கொடுத்திருக்கிறார்.

அவரின் அனுபவம் நிச்சயமாக பயணம் செய்யும் ஒவ்வொருவரின் அனுபவமாக இருக்கும் என்பதை "ஒரு பயணியின் டயரி" நூலை வாசிக்கும் போது புரிந்து கொள்ள முடிந்தது.

பயணத்தினூடே தனக்குக் கிடைத்த அனுபவங்களை, தான்பட்ட சிரமங்களை, தனக்குத் தென்பட்ட அதிசயங்களை, தான் உணர்ந்த அற்புதங்களை மிகவும் குறுகிய வடிவில் ஒவ்வொரு தலைப்பினூடே வடித்திருப்பது வாசிப்பதற்கு மிகவும் இலகுவாகவும் சுவாரஸ்சியமாகவும் அமைந்துள்ளது.


"டாக்டர் இங்கு இருக்கிறாரா?" எனும் தலைப்பிலான அனுபவப் பகிர்வில் கைலாச யாத்திரையில் தனக்கு பிராண வாயு போதாமையால் மூச்சுத்திணறல் ஏற்பட்டதையும் திடீரென ஒரு குரல் டாக்டர் இங்கு இருக்கிறாரா? எனக் கேட்டதும் ஆம் எனக் கூறி வெளியே சென்று ஏனையோருக்கு சிகிச்சை அளித்ததையும் அத்தோடு தனக்கு ஏற்பட்ட மூச்சுத்திணறல் காணாமற் போனதையும் வைத்தியம் என்பதற்கப்பால் ஆன்மிக சிந்தனையினை அற்புதமாய் விதைத்திருக்கிறார்.

இது மட்டுமன்றி மொத்தம் 74 பயண அனுபவங்களை இரத்தினச் சுருக்கமாய் வாசிக்கத் தூண்டியிருக்கிறார் வைத்திய கலாநிதி ஞா.பவானி.

அவற்றில் பாபாவின் 10 நிமிட தரிசனம், அஸ்லாம் பாட்டியுடன் ஓர் அனுபவம், மானசரோவரில் கண்ட மர்ம வெளிச்சம், ஒரு பிச்சைக்காரி போட்ட பிச்சை, புற்றுநோயை மாற்றிய புனித தீர்த்தம், ஏ.எஸ்.பி.அபயசேகர, கங்கை கரையில் ஒரு காவல்காரன், குடும்பத்துக்காக கூடை சுமக்கும் மனிதன், வெள்ளை சேலை பெண்மணி, மீண்டும் ஒரு முறை மரணத்தின் வாசலில், பெண்ணாகி வந்த சிவபெருமான் எனும் தலைப்புக்களிலான சிறு குறிப்புக்கள் மிகவும் அற்புதமாக வடிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வைத்திய கலாநிதி ஆன்மிகத்தில் இவ்வளவு ஈடுபாட்டுடன் இருப்பாரா எனும் ஆச்சரியத்தை இந்த புத்தகத்தை படிக்கும் போது ஏற்படுத்தியிருக்கிறார் நூலாசிரியர்.

பயணங்கள் செய்ய கற்றுத் தந்த என்னுடைய தந்தைக்கு சமர்ப்பணம்.




என முகப்புக் குறியோடு வெளிவந்திருக்கும் "ஒரு பயணியின் டயரி" பயணத்தை விரும்புபவர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல்.

பயணங்கள் எப்போதும் இனிமையானவை. அவை எமக்கு வாழ்க்கை பாடத்தை கற்றுத் தரும் எனும் திருப்தி "ஒரு பயணியின் டயரி" நூலை படித்து முடித்ததும் கிடைக்கும் என்பது மட்டும் உண்மையானது.

**மாவை.நா.கஜேந்திரன்**

# கடல் புறா

## அநபாய குலோத்துங்கன்

அனந்தவர்மன் முகத்தில் உணர்ச்சிகள் மங்கின. பழையபடி கல்லாகிவிட்டது அவன் முகம். மண்டபத்திலிருந்த தென்கலிங்க மக்களிடம் காணப்பட்ட சலசலப்பை அவன் பிரேதக் கண்கள் கவனித்தன. உதடுகள் முன்னைவிடச் சற்று அதிகமாக வெளித்தன. சொற்கள் நிதானமாக, அழுத்தமாக உதிர்ந்தன.


"இளைய பல்லவரே! நீர் இப்பொழுது பேசிய பேச்சுக்கள் சமாதானத்தை அளிப்பதற்கு அறிகுறியல்ல. சோழர்கள் பராக்கிரமத்தைக் குறிப்பிட்டு அச்சுறுத்துகிறீர்கள். அச்சுறுத்தலுக்குக் கலிங்கம் இடங்கொடாது. அச்சத்துக்குப் பணிந்து அடிமையாகாது பெரிய வரலாற்றில் இடம்பெறும் மக்களின் பழக்கமும் அதுவல்ல.

இத்தகைய பயமுறுத்தல்கள் உங்கள் சமாதான ஓலையின் போலித்தனத்தை நிரூபிக்கின்றன. உங்கள் ஓலையையும் படித்துப் பார்த்தோம். சமாதானத்துக்குச் சுங்கமாகக் கலிங்கத்தின் துறைமுகங்களைக் கேட்கிறது சோழ நாடு. துறைமுகங்களை இழந்தால் கலிங்கம் வாணிபத்தை இழக்கும். வாணிபத்தை இழக்கும் நாடு செல்வத்தை இழக்கும். செல்வத்தை இழக்கும் நாட்டில் வறுமை, அறியாமை, துன்பங்கள் தாண்டவமாடும்.

இதற்குக் கலிங்க மக்கள் சம்மதிக்கமாட்டார்கள்" என்று சொன்ன அனந்தவர்மனின் குரலை ஆமோதித்துப் பாலூர்ப்பெருந்துறை மக்களின் குரல்கள் பல "சம்மதிக்க மாட்டோம்", "இவன் போலி," "கொல்லுங்கள். தமிழர்களை" என்று எழுந்து மண்டபத்தின் சுவர்களில் தாக்கி எதிரொலி செய்தன.

சோழர்கள் கலிங்கத்தின் துறைமுகங்களைக் கேட்டது சொர்ண பூமியிடம் வர்த்தகம் நடத்தவேயொழிய, அரசியல் ஆதிக்க ஆசையால் அல்ல என்பதைக் கருணாகர பல்லவன் உணர்ந்தே இருந்தான். ஆனால் சாட்சியங்கள் அன்று அவனுக்கு எதிராகவும் பலமாகவுமிருந்தன. தான் எதைச் சொன்னாலும் நம்பாத அளவுக்கு அனந்தவர்மன் வழக்கை ஜோடித்து மக்களின் வெறியைக் கிளப்பிவிட்டதைக் கண்ட கருணாகர பல்லவன், கோபம் உச்ச நிலையை எட்டியதால் சிவந்த கண்களுடனும் சற்றே துடித்த உதடுகளுடனும் இரைந்து பதில் சொன்னான்.

"அனந்தவர்மரே! நீங்கள் சொல்வதில் தினையளவும் உண்மையில்லை என்பதை உங்கள் மனம் அறியும். சோழர்களுக்கு ஆதிக்க நோக்கமிருக்கும் பட்சத்தில் இராஜேந்திர சோழதேவர் கங்கை கொண்ட காலத்திலேயே இடையிலிருந்த இந்தக் கலிங்கத்தை அடிமைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அப்படி எதுவும் செய்யவில்லை. சுதந்திரமாகவே இருக்கவிட்டார். ஏன்? ஆதிக்க ஆசை இல்லை. கலிங்கத்தை அடக்கச் சோழ நாட்டுக்கு இன்றும் பலமிருக்கிறது பலத்தை உபயோகிக்கவில்லை.




ஏன்? ஆதிக்க ஆசையில்லை. இத்தனை அத்தாட்சிகளிலிருந்தும் உமது மக்களிடையே வெறியைக் கிளறிவிட்டு தமிழர்கள் தலைகளைத் துண்டித்தும் தண்டித்தும் பல வழிகளில் கொடுமை செய்தும் போருக்கு அடிகோலுகிறீர். இன்று உங்களை எச்சரிக்கிறேன். வீணான விரோதத்தை வலுவில் சம்பாதிக்காதீர்கள். சம்பாதித்தால் இலாபமில்லை. உங்களுக்குப் பெருநாசம்" என்று சீற்றத்துடன் கூறினான்.

இதைக் கேட்ட மண்டபத்திலிருந்த கலிங்க மக்கள் ஒருமுறை நடுங்கினார்கள். கருணாகர பல்லவனின் ஆவேசம் அவர்களைக் கிடுகிடுக்க வைத்தது. புலியைத் தட்டி எழுப்பினால் இப்படித்தானிருக்மோ என்றுகூட நினைத்தார்கள். அந்த நடுக்கமே அவர்களை மீண்டும் கூச்சலிடச் செய்தது.

"அவனைக் கொல்லுங்கள்!" "கொண்டு போங்கள் கொலைக் களத்துக்கு" என்ற கூச்சல்கள் எழுந்தன. அந்தக் கூச்சலை ஊடுருவிச் செல்லும் முறையில் அனர்ந்தவர்மன் தீர்ப்புக் கூறினான்: "போலிச் சமாதான ஓலையைக் காட்டி இங்கு வேவு பார்க்க வந்த குற்றத்திற்காகவும் சுங்கச்சாவடியில் தென் கலிங்கத்து மன்னனை அவதூறாகப் பேசியதற்காகவும் உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன்.

இந்தக் கூலவாணிகனுக்கு விசாரணை தேவையில்லை. நீண்நாளாக அவன் ஒற்றனென்பதற்கு அத்தாட்சிகள் நிரம்ப இருக்கின்றன. ஆகவே அவனுக்கு மரண தண்டனை விதிகின்றேன். நீங்களிருவரும் இங்கிருந்து நேராகக் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். அங்கு எந்தக் கலிங்க மக்களுக்கு எதிராகச் சதி செய்தீர்களோ அந்தக் கலிங்க மக்களின் முன்பாக உங்கள் தலைகள் சீவப்படும்."

கொலை வாளின் கூர்மையைப் பழிக்கும் குரலில் இந்தத் தீர்ப்பைக் கூறி, கருணாகர பல்லவனைத் தன் பிரேதேக் கண்களால் நோக்கிய அனந்தவர்மன், "அநபாயச் சோழன் தப்பி விட்டானென்று நினைக்க வேண்டாம். சீக்கிரம் அவனையும் இங்கு கொண்டு வருவேன்." என்றும்சீறிச்சொற்களை உதிர்த்தான். அந்தச் சொற்களை உதிர்த்த உதடுகள் திடீரென வெளுத்தன. அசைவற்று நின்றன.

"நீ கொண்டு வரத் தேவையில்லை அனந்தவர்மா! நானே வந்துவிட்டேன்" என்ற கணீரென்ற சொற்கள் அந்த நீதிமண்டபத்தை ஊடுருவிச் சென்று திடீரென பயங்கர அமைதியை நிலைநாட்டின. அனந்தவர்மன் கண்கள் வாயிலை அச்சத்துடன் நோக்கின. வாயிலை மறித்துக் கொண்டு தன்னந்தனியே நின்றிருந்தான், பிற்காலத்தில் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ அரியணையில் அமரவிருந்த அநபாய சோழன்.

### அபாயத்தை மறைத்த அழகு

யாரும் தப்ப முடியாத பாலூர்ப் பெருந்துறைச் சிறையிலிருந்து எந்த அநபாயனை மீண்டும் சிறைப் பிடிக்க பாலூரின் படைப் பிரிவுகள் இந்தச் சிறு நகரத்தை நான்கு நாட்களுக்கு மேல் சல்லடை போட்டுச் சலித்தும் பயனற்று அலுத்துவிட்டனவோ, எந்த அநபாயனை நீதி மண்டபத்துக்குக் கொண்டு வருவேன் என அனந்தவர்மன் அகந்தையுடன் கூறினானோ, அந்த அநபாயனுடைய குரல், "நீ கொண்டு வரத் தேவையில்லை அனந்தவர்மா! இதோ நானே வந்துவிட்டேன்! என்று நீதி மண்டபத்தை ஊடுவிச் சென்றதும் மித மிஞ்சிய திக்பிரமைக்கு உள்ளாகி நீதி மண்டபத்தின் வாயிலை நோக்கிய பாலூர்ப் பெருமக்கள், அந்த வாயிலை அடைத்துக் கொண்டு நின்ற வாலிபன் தோற்றத்தையும் அவன் முகத்தில் மலர்ந்து கிடந்த மந்தகாசத்தையும் கண்ட்தும் விபரிக்கவொண்ணா வியப்பையும் அடைந்தார்கள்.

சிங்கத்தின் வாய்க்குள் தானாகத் தலையை விடுபவன்போல், ஆயுதம் தாங்கிய கலிங்க வீரர்கள் நிரம்பியிருந்த அந்த நீதி மண்டபத்துக்குள் மிகத் துணிவுடன் நுழைந்த அந்த வாலிபச் சோழனின் கண்கள் மிக அலட்சியமாக அந்த மண்டபத்தை ஒருமுறை அளவெடுத்ததையும் பிறகு அனந்தவர்மனின் மேல் நிலைத்ததையும் கண்ட மண்டபத்திலிருந்த மக்களும் வீரரும், அந்த வாள் கண்கள் அக்ளையிட சிருஷ்டிக்கப்பட்டனவேயொழிய அச்சத்துக்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

உயரத்திலும் பருமனிலும் மரண தண்டனை விதிக்கப்பட்ட கருணாகர பல்லவன் போலவே இருந்த அநபாயனுக்கு. இளைய பல்லவனின் கன்னத்திலிருந்த வெட்டுக்காயத் தழும்பு இல்லாதிருந்தால், அவன் முகம் குழந்தையின் முகம் போலவே இருந்ததையும் அந்தக் குழந்தை முகத்திலும் பருவ வயதுக்கான சிறு மீசை துளிர்விட்டிருந்ததையும் அதன் விளைவாக வதனத்தில் வீரக்களை பூரணமாகப் பொலிவு பெற்றுத் துலங்கியதையும் கண்ட மக்கள், நல்ல நெஞ்சுரமுள்ள ஒரு வாலிபன் முன்பு தாங்களிருப்பதை உணர்ந்தார்கள்.

அநபாய சோழ னின் இடைக் கச்சையிலிருந்து தொங்கிய நீண்ட வாள்கூட உருவப் படவில்லையென்பதையும் எந்த ஆயுதத்தையும் கையிலெடுக்காமலே அநபாயன் அந்த வாயிற்படியில் நின்றதையும் கண்ட அனைவரும். "துணிவுக்கும் ஓர் எல்லையிருக்க வேண்டாமா?" என்று சற்று அவனைக் கடிந்து கொள்ளவும் செய்தார்கள். (தொடரும்...)

# தேசிய பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் பாதிப்பு

# எம்.சி.சி. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது

## செஹான் திட்டவட்டம்



(கொழும்பு) எம். சி.சி.ஒப்பந்தம் தேசிய பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே எக்காரணிகளுக்காகவும் இந்த ஒப் பந்தம் கைச்சாத்திடப்படமாட்டாது என தொழில் அபிவிருத்தி, இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் இறையாண்மையினை கேள்விக்குள்ளாக்கி கடந்த அரசாங்கம் அமெரிக்காவுடன் எம்.சி.சி .ஒப்பந்தத்துக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, இறையாண்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இதன் காரணமாகவே எம்.சி.சி.ஒப்பந்தம் தொடர்பில் ஆராய குழு நியமிக்கப்பட்டது.

எம்.சி.சி.ஒப்பந்தம் நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


ஆகவே எக்காரணிகளுக்காகவும் எம்.சி.சி. ஒப்பந்தத்தை அரசாங்கம் கைச்சாத்திட்டு நடைமுறைப்படுத்தாது.

அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் வெளிவிவகார பொது கொள்கையினையை கடைப்பிடிக்கும் எத்தரப்பினருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்க செயலர் மைக்போம்பியோ நாளை நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4).

# கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொள்கிறோம்

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் ஆதங்கம்



(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படாமலுள்ளமையினால், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.


தற்போது கொரோனா வைரஸானது நாட்டின் பல மாவட்டங்களுக்கு பரவியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார்.

முதல் மற்றும் இரண்டாவது தொடர்புகளைத் தனிமைப்படுத்தவும், கொரோனா நோயாளர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கவும் சுகாதார மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுப் போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்துபவர்கள் விழிப்புடனும், பாதுகாப்பு வழிகாட்டல்களை அவசியம் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

கொரோனா நோயாளிகள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம் என்பதால், சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இந்த விடயத்தில் விழிப்புடன் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லாது வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது கடினம். ஆகவே நோயாளிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளை கொண்டவர்கள் குறித்து உடனடியாக தகவல்களை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)



பரவிப்பாஞ்சான் சமாதான செயலக வீதி புனரமைப்பு பணிகளை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆரம்பித்து வைத்தார். குறித்த வீதியானது கரைச்சி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 1.5 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

## இருவர் கைது

(கொழும்பு)

பாதாள உலகக் குழு உறுப்பினரான புளூ மெண்டல் சங்கா என்பவரின் மனைவியும், மகனும் ஜா-எல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். இந்த கைது நடவடிக்கையின்போது அவர்களிடமிருந்து 10 கிராம் ஹெரோயினும், 2 மில்லியன் ரூபா ரொக்கப் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது புளூமெண்டல் சங்காவின் மனைவியின் வங்கிக் கணக்கில் 8 மில்லியன் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. (ஜ-4)




மெசிடோ நிறுவனத்தால் மன்னார் பொது வைத்திய சாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான ஒரு தொகுதி முகக்கவசங்கள் மற்றும் கிருமித்தொற்று நீக்கிகள் நேற்று வழங்கப்பட்டன. (படம்:- ஜோசப்நயன்)

## 113 பேர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசப் பகுதியில் இது வரைக்கும் டெங்கினால் 113 பேர் உயிரிழந்ததாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேசத்தில் நேற்று ஒருவர் உட்பட 113 பேர் இதுவரைக்கும் டெங்கு நோயினால் உயிரிழந்தனர்.

இந்நிலையில் 36 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொரோனாவை விடமோசமானது டெங்கு. எனவே இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

எனவே தற்போது வீட்டில் முடங்கியிருக்கும் பொது மக்கள் தமது வீடு மற்றும் அதன் பகுதிகளை துப்பரவாக வைத்திருக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## 316 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

முப்படையினரால் முன்னெடுத்து செல்லப்படும் தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்த 316 பேர் வெளியேறினர்.

இதற்கமைய நாட்டில் இது வரையில் 57 ஆயிரத்து 427 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளனர்.

அத்துடன் மேலும் 8 ஆயிரத்து 421 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் 73 தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது. (ஜ-4)

## மட்டக்களப்பில் 16 பேருக்கு தொற்று

(கோரளைப்பற்று)

மட்டக்களப்பு கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வாழைச்சேனை ஓட்டமாவடி பிரதேசத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உள்ளதாக நேற்று திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 27 பேருக்கு கொரோனா தொற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

கொரோனா தொற்று தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

## அதிக விலைக்கு விற்காதீர்



(கொழும்பு)

ஊரடங்கு அமுலாகியுள்ள சில பகுதிகளில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களும் முகக் கவசங்களும் அதிக விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண எச்சரித்தார்.

தற்போதைய சந்தர்ப்பங்களில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்ப்பதே சிறந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர்குறித்து நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் எச்சரித்தார். (ஜ-4)

## ஓமானிலிருந்து விமானசேவை ஆரம்பம்

(கொழும்பு)

ஓமான் நாட்டின் இலங்கைக்கான தேசிய விமான சேவையான "சுல்டானேட் ஓமான்" நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், ஓமான் எயார் குவைத், பஹ்ரெய்ன், மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு தமது சேவையை நீடித்துள்ளதாக சுல்டான்னேட் ஓமான் அறிவித்துள்ளது.

இந்த சேவை கொழும்புக்கு வாரம் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த நிலையில் தமது விமானத்தில் பயணிப்போர் உரிய கொரோனா வைரஸ் முன்னேற்பாடுகள் தொடர்பில் உறுதி செய்யப்படுவர் என்று ஓமான் எயார் அறிவித்துள்ளது. (ஜ-4)

## கொரோனா சிகிச்சைக்கு 5 வைத்தியசாலைகள்

(கொழும்பு)

கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக, களுத்துறை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவிலுள்ள 5 வைத்திய சாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் சமன் கீகனனே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பண்டாரகம, இங்கிரிய, பிம்புர, மத்துகம, இத்தேபான ஆகிய 5 வைத்தியசாலைகளே இவ்வாறு கொரோனா சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2154

ஆதவன்




சாந்தினி





தனுசன்




பகிரதன்




கார்த்திகா




சுபாசினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறு மைத்திரிக்கு ஆணைக்குழு உத்தரவு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சமயத்தில் சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றமைக்கான மருத்துவ அறிக்கைகளை கையளிக்கும்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவை பிறப்பித்தது.



கடந்த 23ஆம் திகதி அவர் ஆணைக்குழுவில் முன்னிலையானபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு 46 நிமிடங்களின் முன்னதாக அரச புலனாய்வு சேவை இயக்குநர் நிலந்த ஜெயவர்த்தன, தொலைபேசி வழியாக முன்னாள் ஜனாதிபதியை தொடர்பு கொண்டது தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவிடப்பட்டது.

எனினும், தொலைபேசி உரையாடல் தரவை மைத்திரி மறுத்தார்.

தாக்குதலின் பின்னரே நிலந்த தன்னை தொடர்பு கொண்டதாகவும், இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையில் இரண்டரை மணித்தியால நேர வித்தியாசமுள்ளதாகவும் தெரிவித்தார்.

நான் வைத்தியசாலையில் இருந்தேன். தேவைப்பட்டால் நான் மருத்துவ அறிக்கைகளை தர முடியும். சம்பவத்தை தொடர்ந்து வைத்தியசாலையில் இருந்து ஹோட்டலுக்கு வந்தேன். சம்பவத்தின் தீவிரத்தை உணர்ந்து நான் தொலைபேசியில் ஆலோசனை வழங்கினேன்" என்று அவர் மேலும் கூறினார்.(நி-7)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## கோவில்கள் தோன்றியது எப்படி?

கற்கோவில்கள் அமைக்கப்படுவதற்கு இவைதான் முன்னோடியாக இருந்தன. இவைதான் கோவில்கள் தோன்றக் காரணமாக இருந்தன. மக்களின் சிந்தனை வட்டம் விரிவடைய, விரிவடைய இலைப் பந்தல் ஆலய வழிபாட்டிலும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. தங்களுக்கு விருப்பமான இடங்களில் எல்லாம் இறை உருவங்களை அமைத்தனர். மலைகள், கடலோரங்கள், ஏரிக்கரை ஓரங்கள், அடர்ந்த காடுகளுக்கும் சென்று இறைவன் உருவங்களை அமைத்தனர்.

இதற்கு பிறகு தான் இறை வழிபாட்டில் ஒரு முக்கிய மாற்றம் நிகழ்ந்தது. மலை, காடு, ஏரி, குளம், கடலோரம் போன்ற பகுதிகளில் உள்ள கடவுளை ஊருக்குள் அழைத்து வந்து எழுந்தருள செய்ய விரும்பினார்கள். இந்த வழிபாடு மாற்றத்திற்கான குறிப்புக்கள் சங்ககால பாடல்களில் உள்ளன.

இது ஊர்கள் தோறும் இறை வழிபாட்டை வியாபிக்கச் செய்தது. எங்கெல்லாம் இறை திருவுருவங்களை பிரதிஷ்டை செய்தார்களோ, அங்கெல்லாம் கோவில் கட்டினார்கள். அந்த கோவில்களில் எழுந்தருளி உள்ள கடவுளுக்கு தினம், தினம் தடபுடல் விருந்து கொடுத்து வழிபட்டனர். உயிர்களை பலியிடுதல் என்பது இதில் இருந்து தான் தோன்றியது.

பின்னர் இறை வழிபாடுகளில் போட்டியும் புதுமையும் சேர்ந்தன. பலியிடுதல், மலர் தூவுதல், நைவேத்தியம் படைத்தல், பண் இசைத்து பாடுதல், வெறியாட்டு நடத்துதல் என்று தங்களது விருப்பங்களை எல்லாம் இறை வழிபாட்டில் புகுத்தினார்கள்.

பிறகு ஒரு கால கட்டத்தில் கடவுள் வடிவங்களை வீதி, வீதியாக எடுத்துச் செல்லும் பழக்கம் தோன்றியது. மக்கள் தங்கள் வீடு முன்பு நின்று கடவுளை வரவேற்று, உபசரித்து மனநிறைவு பெற்றனர்.

இதைத் தொடர்ந்து வந்த காலங்களில் மக்கள் சிந்தனை பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப சுயநலமாக மாறி இருந்தது. தெருவில் வந்து செல்லும் இறைவன் நிரந்தரமாக தம் வீட்டுக்குள்ளேயே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசித்தனர்.

அதன்விளைவு மரத்தில் தோன்றி, மலைக் காடுகளில் தவழ்ந்து, ஊருக்குள் புகுந்த தெய்வம், வீடுகளுக்குள்ளும் வந்து விட்டது. அப்படி வந்த இறை திருவுருவங்களை அரசர்கள், வசதி உள்ளவர்கள் வெளியில் அனுப்ப சம்மதிக்கவில்லை. காலம் செல்ல செல்ல இது எங்கள் குல தெய்வம் என்று வரையறுத்துக் கொண்டனர்.

இதனால் தான் பல நூறு ஆண்டுகள் கடந்தும் பல தலைமுறைகளை கண்ட பிறகும் பல ஊர்களில் இன்றும் குல தெய்வ வழிபாடு உச்சத்தில் இருப்பதை பார்க்க முடியும்.

ஆக, இயற்கையோடு இயைந்த நம் முன்னோர்கள் வழிபாடு, மாறி மாறி, அருவம், உருவ நிலைக்கு வந்து, அந்த உருவத்தை சுற்றிக்கோவில் எழுந்ததை புரிந்து கொண்டிருப்பீர்கள். ஐந்து வகை நிலங்களுக்கும் தனித்தனி தெய்வங்கள் இருந்ததை சங்க காலத்தில் உறுதி செய்தனர். காலம் மாறியது. சங்ககாலம் மறைந்து, சங்கமருவிய காலம் உதயமானது. இந்த மாற்றத்தால் இறை உருவம் தரும் சக்தியால் கடவுள் தங்களிடம் பேசுவதாக மக்கள் கருதினார்கள். அந்த கால புலவர்கள் இவற்றை சற்று கற்பனை சேர்த்து சுவைபட பாடினார்கள்.

இதற்கிடையே வேத சடங்குகள் எனும் வேள்வி முறை தோன்றியது. காடுகளிலும், நீர்நிலை ஓரங்களிலும் வேள்விகள் நடத்தப்பட்டன.

வேள்வி நடத்தப்பட்ட இடங்கள் புனித பகுதிகளாக கருதப்பட்டன. அந்த இடங்களில் எல்லாம் பழந்தமிழர்கள் கோவில்களை கட்டினார்கள். அதனால் தான் தமிழ் நாடு முழுவதும் கோவில்களாக உள்ளன.

உலகில் உள்ள கோவில்களில் பாதிக்கு மேல் இந்தியாவில் உள்ளது. இந்தியாவில் உள்ள கோவில்களில் 60 சதவீதம் தமிழ் நாட்டில் உள்ளது.

சமீபத்திய ஒரு கணக்கெடுப்புப்படி தமிழ்நாட்டில் அரசு சார்பு புராதன கோவில்கள் 34 ஆயிரத்து 491 உள்ளன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## நீரில் மூழ்கி மாணவன் பலி

(கொழும்பு)

பலாங்கொட, பால்துவ ஆற்றில் உள்ள "அலியா வடுனா வாலா பகுதியில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பெரதெனியா பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் பலாங்கொட - கிரிமதின்ன பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த மாணவன் தனது நண்பர்களுடன் பால்துவ ஆற்றுக்கு குளிக்கச் சென்ற போதே இவ்வனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பலாங்கொட ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பின்னவல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(நி-7)

## ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 76 பேர் கைது



(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேர காலப்பகுதியில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 16 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 4ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை ஆயிரத்து 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 156 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 | 200 |
| தக்காளி | 80 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 100 | 80 |
| கோவா | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 180 | 200 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 230 | 220-260 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 260 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 40 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 160 | 180 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | -- | 140 |
| கீரை – 1 பிடி | 30 | 20 | 50 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 320 |
| வெங்காயப்பூ | 260 | 240 | -- | 280 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 100 | -- | — |



# சிறுவர் அரங்கம்

## வேட்டை நாய்



வேட்டைக்காரன் ஒருவன் இரண்டு நாய்கள் வளர்த்து வந்தான்.

அவற்றில் ஒரு நாய் அவனுடன் வேட்டைக்குச் செல்லும். மற்றொரு நாய் அவனது வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்கும்.

வேட்டைக்காரன் வேடடைக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்ததும், வேட்டையில் கிடைத்தை வீட்டு நாய்க்கே எப்போழுதும் அதிகம் கொடுப்பான்.

வேட்டை நாய் அதைப் பொருட்படுத்தவில்லை. இதேபோல் தினமும் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்ததும், வீட்டு நாய்க்கே அதிகம் கொடுத்தான்.

அதைக் கண்ட வேட்டை நாய்க்கு அப்போதுதான் வருத்தம் ஏற்பட்டது. வருத்தம் கொண்ட வேட்டை நாய், வீட்டு நாயைப் பார்த்து வேட்டையாடுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா?

நான் வேட்டையில் சம்பாதித்து வருவதில் மட்டும் நீ அதிக பங்காகப் பெற்றுக் கொள்கிறாய். இது நியாயமா? என்று வருத்தத்துடன் கேட்டது.

அதைக் கேட்ட வீட்டு நாய் சிரித்துக் கொண்டே, நண்பனே! இதில் என்னுடைய தவறு எதுவுமில்லை. நீ என்மீது ஏன் வருத்தப்படுகிறாய்.

இந்தத் தவறு நம் எஜமானனுடையது. அவர் எனக்கு வேட்டையாடச் சொல்லித் தரவில்லை. மற்றவர் சம்பாதித்த பொருளில் பங்கு பெறத்தான் சொல்லிக் கொடுத்திருக்கிறார்! என்று பதில் கூறியது.

அதைக்கேட்டதும் வேட்டை நாய் எதுவும் பேசாமல், இந்த அநியாய உலகத்தில் நியாயத்தை எதிர்பார்ப்பது தவறு என்பதை உணர்ந்து அமைதியாகச் சென்றது.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஜீலை-26




மனதுக்குள் சொல்லி சமாதானம் செய்து கொண்டாரே தவிர இருப்புக் கொள்ளவில்லை. யுத்தம் எப்பொழுது முடியும் என்று துடிப்பாக இருந்தது. அவரை நீண்ட நேரம் தவிக்கவிட்டு விட்டு இறுதியாக தளபதி பார்மீனியா அந்த வார்த்தைகளைச் சொன்னார்.

இல்லீரியா தங்களின் பொற்பாதங்களில் விழுந்து விட்டது. அவ்வளவுதான். பிலிப்பின் குதிரை நான்கு கால் பாய்ச்சலில் நாற்பது குதிரைகளின் வேகத்தில் அரண்மனை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

மாசிடோனியர்களின் தலைநகர் பெல்லா. கம்பீரமும் பிரமாண்டமும் கலந்த கலவையாக பிலிப்பின் கோட்டை. மலைக்க வைக்கும் மதில் சுவர்கள் அழகான மர வேலைப்பாடுகள்.

உள்ளே, வெளியே என்று எங்கு பார்த்தாலும் ஆள், அம்பு சேனைகள். வழியில் விரிக்கப் பட்டிருந்த பட்டுக் கம்பளத்தின் மீது நடக்க ஆரம்பித்தார் பிலிப்.

அந்தப் பாதை அந்தப்புரம் நோக்கிச் சென்றது. அவரைப் பின் தொடர்ந்து தளபதி பார்மீனியோ உள்ளிட்ட அமைச்சர்களும் சென்றார்கள்.

அந்தப்புரத்துக்கு வெளியே மற்றவர்கள் எல்லாம் காத்திருக்க, மன்னர் பிலிப் மட்டும் உள்ளே நுழைந்தார். ஒய்யாரப் பட்டிலில் படுத்திருந்தாள் ஒலிம்பியஸ் (Olympias)

பிரசவத்தால் ஏற்படும் உடல் அசதிகள் மன்னர் பிலிப்பின் மனைவி என்பதற்காக ஒதுங்கி வழி விட்டுவிடுமா என்ன? வலி, ரணம், கம்மிய குரலோடு முனகிக் கொண்டிருந்தாள்.

கூடவே மருத்துவம் பார்த்த பெண்மணி, இன்னும் சில பெண்கள். அறைக்குப் பின்பக்கம் அரண்மனை மருத்துவர் நின்று கொண்டிருந்தார்.

எங்கே என் மகன்? குழந்தையை வாரி அணைக்க ஓடினார் மன்னர். முகத்தைப் பார்த்தார்.

இளமஞ்சள் நிறம், உடலும்கூட கிட்டத்தட்ட அதேநிறம். மெல்ல தொட்டுப் பார்த்தார். மெத் மெத்தென்று இருந்தது. குழந்தையின் கண்களைப் பார்த்தார்.

என் மகனே அலெஸ்சாண்டர். மன்னர் பிலிப் வாய்திறந்து சொன்ன பிறகுதான் ஒலிம்பியஸ் கண்களைத் திறந்து பார்த்தாள். அவளிடம் புன்னகை கூட இல்லை.

சொல்லப் போனால் அவரைப் பார்த்ததில் அவளுக்கு எந்த சந்தோசம் இல்லை. அவரும் அவளுடைய கேசத்தை விரல்களால் வருடிக் கூடக் கொடுக்கவில்லை. அதை ஒலிம்பியஸூம் எதிர்பார்க்கவில்லை.

இருவருக்கும் இடையே அப்படியொரு பரஸ்பர புரிதல். காரணங்கள் நிறைய. உடல் ரீதியான நெருக்கம் மட்டும் இருந்து கொண்டிருந்தது. அதற்குச் சாட்சியமாகக் குழந்தை. ஆனால் மன ரீதியாக? ம்ஹூம் கொஞ்சமும் கிடையாது.

(தொடரும்)

செய்யுங்கள் அல்லது செய்யாமலிருங்கள். முயற்சி செய்யப் போவதாக வெறுமனே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். – யோஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொற்றாளர்கள் அதிகரித்தால் இறப்பும் அதிகரிக்கும்

நாளுக்கு நாள் கொரோனாத் தொற்று அதிகரித்த வண்ணமுள்ளது. கட்டுப்படுத்துகின்ற வகை தெரியாமல் மருத்துவர்கள் திணறத் தலைப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் மிகக்குறைந்த தொற்றாளர்கள் என்பதால், மரணம் தடுக்கப்பட்டது.

மருத்துவர்களும் துணை மருத்துவ சேவையாளர்களும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி கொரோனாத் தொற்றாளர்களைக் காப்பாற்றினர்.

ஆனால் இப்போது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக அதிகரித்துச் செல்கிறது.

இந்நிலையில், கொரோனா சிகிச்சை நிலையங்களில் ஈடுகொடுக்க முடியாத கட்டம் ஏற்படும்போது, இறப்புக்களின் எண்ணிக்கை நிச்சயம் அதிகரிக்கவே செய்யும்.

இதனை நிரூபணம் செய்வதுபோல கொரோனா தொற்றால் ஏற்பட்ட மரணம் 16 என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளது.

முதலாவது இறப்புக்கும் இரண்டாவது இறப்புக்குமான கால இடைவெளி நீண்டதாக இருக்க; 14,15,16 என்ற இறப்பு அடுத்தடுத்து நடந்ததை அவதானிக்கலாம்.

ஆக, கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மரணத்தின் எண்ணிக்கையும் கூடிச் செல்லும் என்ற உண்மை உணர்தற்குரியது. இதனை மருத்துவர்களும் உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில் கொரோனாத் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் நாம் அதீத கவனம் செலுத்துவதே ஒரே வழியாகும்.

கொரோனா நிலைமை தொடர்பில் தற்போது வடபகுதி பாதுகாப்புடன் இருப்பதாக நாம் நம்பியிருக்கின்றோம்.

எனினும் தென்பகுதியில் கொரோனாத் தொற்று கட்டுக்கடங்காமல் செல்வதைப் பார்க்கும்போது, அதன் அடுத்த கட்டப் பாய்ச்சல் வடபகுதியாக இருக்கலாம் என ஊகிப்பதில் தவறில்லை.

ஆகவே, கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்கின்ற வழிமுறைகளை ஒவ்வொருவரும் பின்பற்றுவது மிகவும் அவசியமாகும்.

அதேவேளை இந்த உலகப் பிரபஞ்சத்தை இயக்குகின்ற அண்டம் கடந்த பொருளாக இருக்கும் இறைபரம்பொருளை வேண்டுதல் செய்வது மிகவும் முக்கியமானது.

குறிப்பாக சிவாச்சாரியப் பெருமக்கள் வேதம் ஓதி யாகம் வளர்த்து இறைவனின் அருளை வேண்டி கிரியை செய்வது நன்மை பயப்பதாகும்.

அதேவேளை பொதுமக்களும் வீடுகளில் தத்தம் வழிபாட்டு முறைகளினூடு பிரார்த்தனை செய்தால், இறைவனின் திருவருள் நிச்சயம் கிடைத்தாகும்.

# சுகாதாரப் பணிப்பாளரை நியமிக்காதது ஏன்?

## சம்பிக்க கேள்வி

(கொழும்பு)

நாடு பாரிய சுகாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பதானது இராணுவத்தளபதி ஒருவர் இல்லாது யுத்தத்திற்கு முகம்கொடுப்பது போன்ற நிலைக்கு நிகரானது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டு மக்கள் மீண்டும் சுகாதார, பொருளாதார மற்றும்சமூக பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

இந்நிலையில், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களை பணிகளுக்கு செல்லுமாறு கூறுகின்றனர். ஆயினும் புறக்கோட்டை பகுதியில் பேருந்து தரிப்பிடங்கள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் ஊழியர்கள் எவ் வாறு தமது சேவை நிலையங்களுக்கு செல்வார்கள். அரசாங்கம் இதற்கு மாற்று வழியை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

இத்தகைய சுகாதார பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருவதற்கு சுகாதார மற்றும் தொற்று நோயியல் நிபுணர்களே தலைமை தாங்க வேண்டும்.

இதேவேளை, வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டவுடன் அந்த பகுதிகளை முடக்க தீர்மானிப்பவர்கள், அப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று வைரஸ் தொற்று மீண்டும் பரவலடைவதற்கு காரணமாக இருந்த ஆடைத்தொழிற்சாலை உள்ளிட்ட நிறுவனங் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (ஜ-4)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஆயிரம் கிலோ மஞ்சள் தூத்துக்குடியில் மீட்பு

(தூத்துக்குடி)

இந்தியாவின் தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற ஆயிரம் கிலோ மஞ்சள் கட்டி அடங்கிய 40 மூட்டைகளை நடுக்கடலில் வைத்து நாட்டுபடகுடன் மெரைன் பொலிஸார் நேற்றுக் காலை பறிமுதல் செய்துள்ளனர்.

பாம்பன் பாலம் கடல் வழியாக வெளி மாவட்ட படகு ஒன்றில் இலங்கைக்கு கடத்தல் பொருட்கள் அனுப்பப்பட உள்ளதாக மண்டபம் மெரைன் ஆய்வாளர் கனகராஜ்க்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பாம்பன் வடக்கு கடற்கரையில் நேற்றுக் காலை ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது பாம்பன் வெளிச்சவீட்டின் அருகே நடுக்கடலில் உரிய பதிவு எண் இல்லாத நாட்டு படகு ஒன்று நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

இதனை கண்ட மண்டபம் மெரைன் பொலிஸார் படகில் ஏறி சோதனை செய்தனர்.

அப்போது படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக மூட்டை மூட்டையாக மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்ததையடுத்து நாட்டு படகை பாம்பன் வடக்கு கடற்கரைக்கு எடுத்து சென்று மெரைன் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் நாட்டு படகு தூத்துக்குடியை சேர்ந்தது எனவும் படகிலுள்ள ஆதார் அட்டை பாம்பன் சேதுபதி நகரை சேர்ந்தவர் உடையது எனவும் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தப் நாட்டுபடகு தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு சமையல் மஞ்சள் கடத்தி செல்வதற்காக பாம்பன் வந்ததாகவும் இலங்கையில் கடந்த சில வாரங்களாக கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் வார இறுதி நாட்களில் தளர்வு இல்லா ஊரடங்கு அமுலில் இருந்ததால் இலங்கை மீனவர்களை மீன் பிடிக்க கடலுக்குள் அனுமதிக்கவில்லை.

இதனால் மீனவர்கள் போர்வையில் கடத்தல் காரர்கள் இலங்கை பகுதிக்கு செல்ல முடியாததால் சமையல் மஞ்சளை கடத்தி வந்த கடத்தல்காரர்கள் பாம்பனில் நாட்டு படகை விட்டு விட்டு சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய கடத்தல்காரர்களை தீவிரமாக தேடி வருவதாகவும் விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என மெரைன் காவல் ஆய்வாளர் கனகராஜ் தெரிவித்தார்.

மேலும் இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த இராமேஸ்வரம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தீபக் சுவீஸ்ச் பாம்பன் வடக்கு கடற்கரையில் கைப்பற்றப்பட்ட சமையல் மஞ்சளை பார்வையிட்டதுடன் அப்பகுதி மீனவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறார். (ம-3)

## பூநகரி செம்மங்குன்று பகுதியில் ரூ.15 இலட்சம் பெறுமதியான முதிரை, பாலை குற்றிகள் மீட்பு

(முறிகண்டி)

15 இலட்சம் பெறுமதியான முதிரை குற்றிகள் மற்றும் பாலை தீராந்திகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செம்மங்குன்று காட்டுக்குள் சட்ட விரோதமான முறையில் தொடர்ச்சியாக காட்டு மரங்கள் வெட்டப்பட்டு விற்பனை செய்து வருவது தொடர்பில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த காட்டுப்பகுதியில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 26 முதிரை மர குற்றிகளும், 21 பாலை மர தீராந்திகளும் இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்ததை பொலிசார் அவதானித்து அவற்றை பாதுகாப்பான முறையில் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தப்பிசென்றுள்ள நிலையில் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ம-3,84,100,316)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## நமக்குத் தேவையான மூன்று

❖ உன் உடலில் ஏற்பட்டுள்ள கறையைப் பற்றிக் கவலைப்படாதே. இறைவன் என்னும் கருணைக்கடலில் மூழ்கி எழுந்தால், அது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

❖ உங்களிடம் அன்பு இருந்தால் ஆகாத செயல் என்று எதுவுமில்லை, நீங்கள் த்ன்னலத்தை துறந்து விட்டால் உங்களை எதிர்க்கும் சக்தி ஏதுமில்லை.

❖ நீங்கள் கடவுளின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். அதனால், புனிதமும் பூரணத்துவமும் உங்களிடம் நிறைந்திருக்கிறது.

❖ அன்பு ஒரு முதலீடு. எவ்வளவு போட்டாலும் அது மீண்டும் நம்மை வந்தடைந்துவிடும்.

❖ ஒட்டகம் முள் செடியைச் சாப்பிடும் போது வாயிலிருந்து ரத்தம் சொட்டும், இருந்தாலும் தின்பதை நிறுத்துவதில்லை. அதுபோல உலகத்தார் எத்தனையோ துன்பங்களுக்கு ஆளானாலும் உலகப்பற்றை அவர்கள் விடுவதில்லை.

❖ அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம்.

# பென் ஸ்டோக்ஸ், சஞ்சு சாம்சன் அபாரம்

## நிலை குலைந்தது மும்பை



ஐ.பிஎல் தொடரின் 45 ஆவது லீக் ஆட்டம் அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் பட்டிங் தேர்வு செய்தது. அதன் படி குயின்டான் டி காக், இஷான் கிஷன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

டி காக் 6 ரன்னிலும் இஷான் கிஷன் 37 ரன்னிலும் சூர்யகுமார் யாதவ் 40 ரன்னிலும் ஆட்டமிழந்தார். அப்போது மும்பை இந்தியன்ஸ் 12.2 ஓவரில் 96 ரன்கள் எடுத்திருந்தது. இறுதிக்கட்டத்தில் ஹர்திக் பாண்ட்யா சிக்சர் மழை பொழிந்தார்.

இறுதியில், மும்பை இந்தியன்ஸ் 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 195 ரன்கள் குவித்தது. ஹர்திக் பாண்ட்யா 21 பந்தில் 7 சிக்ஸ், 2 பவுண்டரியுடன் 60 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.


இதையடுத்து, 196 ரன்கள் எடுத்தால் . வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது. ராபின் உத்தப்பா, பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்.

உத்தப்பா 17 ரன்னிலும் ஸ்டீவ் ஸ்மித் 11 ரன்னிலும் வெளியேறினர். அப்போது ராஜஸ்தான் 2 விக்கெட்டுக்கு 44 ரன்கள் எடுத்திருந்தது.

மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான பென்ஸ்டோக்சுடன் சஞ்சு சாம்சன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக ஆடினர். இந்த ஜோடி இறுதிவரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது. சிறப்பாக ஆடிய ஸ்டோக்ஸ் சதமடித்தார்.

இறுதியில், ராஜஸ்தான் அணி 196 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஸ்டோக்ஸ் 107 ரன்னும், சஞ்சு சாம்சன் 54 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். இது ராஜஸ்தான் அணி பெற்ற 5 ஆவது வெற்றி ஆகும். (4)

# பெங்களூரை கவிழ்த்தது சென்னை



ஐ.பி.எல். தொடரில் 44 ஆவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் அபுதாபியில் நடைபெற்றது. ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. டாஸ் வென்ற ஆர்.சி.பி. பட்டிங் தேர்வு செய்தது.

விராட் ஹோலி 50 ரன்களும், டிவில்லியர்ஸ் 39 ரன்களும் அடிக்க ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 145 ரன்கள் அடித்தது.

பின்னர் 146 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ருத்துராஜ் கெய்க்வாட், டுபிளிசிஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக விளையாடத் தொடங்கினர்.

சென்னை அணி 5.1 ஓவரில் 46 ரன்கள் எடுத்திருக்கும்போது டு பிளிசிஸ் 13 பந்தில் தலா இரண்டு சிக்ஸ், இரண்டு பவுண்டரிகளுடன் 25 ரன்கள் விளாசி ஆட்டமிழந்தார்.

அடுத்து ருத்துராஜ் கெய்க்வாட் உடன் அம்பதி ராயுடு ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் அதிரடியாக விளையாடியது. அம்பதிராயுடு 27 பந்தில் 39 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து டோனி களம் இறங்கினார்.

ருத்துராஜ் கெய்க்வாட் 42 பந்தில் அரைசதம் அடித்தார். இந்த ஜோடி அணியை 18.4 ஓவரில் வெற்றிக்கு அழைத்துச் சென்றது. சென்னை சுப்பர் கிங்ஸ் 18.4 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 150 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ருத்துராஜ் கெய்க்வாட் 51 பந்தில் 65 ரன்களும் எம்.எஸ். டோனி 19 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த தோல்வியால் ஆர்சிபியின் பிளேஓஃப்ஸ் சுற்றை உறுதி செய்யும் வாய்ப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (4)

# பர்முயுலா 1 கார்ப்பந்தய சுற்றுப்போட்டி லீவிஸ் ஹாமில்டன் முதலிடம்



பர்முயுலா-1 கார்ப் பந்தயத்தின் பனிரெண்டாவது சுற்றான போர்த்துகியுஸஸ் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹாமில்டன் முதலிடம் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'பார்முலா 1' கார்ப்பந்தயம், 21 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் பனிரெண்டாவது சுற்றான போர்த்துகியுஸஸ் கிராண்ட் பிரிக்ஸ் சுற்று அல்கார்வ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில், 306.826 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.


இதில் மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹாமில்டன் பந்தய தூரத்தை ஒரு மணித்தியாலம் 29 நிமிடங்கள் 56.828 விநாடிகளில் பந்தயத் தூரத்தை கடந்து முதலிடத்தை பிடித்தார்.

இதனைத் தொடர்ந்து பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வால்டெரி போட்டாஸ், ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள் 22.420 விநாடிகளில் பந்தயத் தூரத்தைக் கடந்து இரண்டாவது இடத்தை பிடித்தார்.

இதனையடுத்து, ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள் 31.336 விநாடிகளில் பந்தயத் தூரத்தைக் கடந்து ரெட் புல் அணியின் வீரரான மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் மூன்றாவது இடத்தை பிடித்தார்.

பர்முயுலா-1 கார்ப்பந்தயத்தின் பதின்மூன்றாவது சுற்றான எமிலியா ரோமக்னா கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் முதலாம் திகதி டினோ ஃபெராரி ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது. (4)

# வெளியேறினார் கபில்தேவ்





மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் நேற்று முன்தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணிக்கு முதல்முறையாக உலக கிண்ணத்தை வென்று கொடுத்த கபில்தேவ். அவரது அபாரமான துடுப்பாட்டம், வேகப்பந்து வீச்சு, களத்தடுப்பு மற்றும் தனித்துவமான தலைமைப் பதவி ஆகியவற்றினால் கிரிக்கெட் உலகில் தனக்கென தனி இடம் பிடித்தார்.

61 வயதான கபில்தேவுக்கு அண்மையில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டமையினால் டில்லியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு இதயத்துக்கு செல்லும் இரத்தக் குழாயில் ஏற்பட்டு இருக்கும் அடைப்பை நீக்க 'ஆஞ்சியோ பிளாஸ்டி' சிகிச்சை அளிக்கப்பட்டது. தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த அவரது உடல்நிலையை வைத்தியர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் உடல் நிலை சீராக உள்ளதையடுத்து கபில்தேவ் வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பந்து வீசுவது எவராயினும் அவர்களை நெருக்கடிக்குள் தள்ள முடியும்

## பென் ஸ்டோக்ஸ்

ஐ.பி.எல்.தொடரின் நேற்று முன்தினம் மும்பை அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது. இப்போட்டியில் மும்பை அணி குவித்திருந்த 195 ஓட்டங்களை ராஜஸ்தான் அணி இலகுவாக எட்டிப்பிடித்தது.

ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்ட பென் ஸ்டோக்ஸ், இப்போட்டி குறித்து கூறுகையில், இந்த ஆட்டத்தில் நிச்சயம் வெற்றி பெற வேண்டிய அவசியம் இருந்தது.

இதனால், இது ஒரு நல்ல வெற்றி. மற்ற போட்டிகளை விட இதில் தன்னம்பிக்கையுடன் இறங்கினேன்.

எந்தப் பந்து வீச்சாளராக இருந்தாலும் பும்ராவாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அவர்கள் வீச வரும்போது அவர்களை நெருக்கடிக்குள் தள்ளும் நல்ல நிலையில் இருந்தோம்.

இங்கிலாந்து ரசிகர்களுக்கு பல கடினங்களுக்கு இடையில் இந்த இன்னிங்ஸ் மகிழ்ச்சி கொடுத்திருக்கலாம் என்று கூறியுள்ளார். (4)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## சிலவேளை...

வித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் டொமினிக் பர்க்லர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கு இடையிலான முதலீடுகள், ஏற்றுமதி, சுற்றுலாத்துறை ஆகியன தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். அத்துடன், கோவிட்-19க்கு எதிரான செயற்பாடுகள் குறித்தும் இருவரும் ஆராய்ந்துள்ளனர். (ம-3)

## அறிகுறிகள்...

கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேலியகொட உப கொத்தணியுடன் நாடு பூராகவும் கோவிட் தொற்று பரவி உள்ளதாகவும் சில தொற்றாளர்கள் அறிகுறிகள் இன்றி பதிவாகியுள்ளதாகவும் இதன் காரணமாக நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் மேல் மாகாணத்தின் கொழும்பு மாநகர சபையின் சில பிரதேசங்கள் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார பிரிவினரிடம் இருந்து நழுவி வருவதாகவும் மினுவாங்கொட மற்றும் திவுலப்பிட்டி கொரோனா பரவல் மிகவும் இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டதாகவும் சுட்டிக் காட்டினார். (ம-3)

## கொரோனா...

நாட்டில் கொரோனா வைரஸ் இன்னும் சமூகத் தொற்றாக மாற்றமடைய வில்லை என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர், மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் கோவிட்-19 வைரஸ் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அத்தியாவசியமற்ற அனைத்து செயற்பாடுகளில் இருந்தும் அநாவசியமான பயணத்தையும் முடிந்தவரை கட்டுப்படுத்த வேண்டும் என்று மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர சுட்டிக் காட்டினார்.

இதற்கிடையில், தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு அருகில் வசிக்கும் மக்களுக்கு தேவையற்ற பயம் இருக்கக்கூடாது என்று சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்தா ஹெரத் ஊடக சந்திப்பில் வலியுறுத்தினார். (ம-3)

## கண்டுபிடிக்கும்...

உறவுகள் தெரிவித்தனர்.

நேற்று வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் போராட்ட பந்தலில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அமெரிக்க வெளிவிவகார செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மின்னஞ்சல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் வன்னியில் நடந்த இனப் போரின்போது 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

நாங்கள் 1347ஆவது நாளாக ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு என உண்ணாவிரதம் இருக்கிறோம். எங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் வரை எங்கள் உண்ணாவிரதம் தொடர்கிறது.

எங்கள் குழந்தைகளை தடுப்புக்காவல் மற்றும் பிற மறைவிடங்களிலிருந்து அழைத்து வர வேண்டும் என்ற எங்கள் கோரிக்கைக்கு இலங்கை தவறிவிட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டுபிடிக்க அமெரிக்காவிற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. துன்பப்படும் இந்த தமிழ் தாய்மார்களுக்கு உதவ உங்கள் நல்ல அலுவலகத்தைப் பயன்படுத்துமாறு செயலாளரை நாங்கள் தயவாக கேட்கிறோம் எனத் தெரிவித்தனர்.

(ம-3,250,299)

## பாராளுமன்றம்...

உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றின் சுத்திகரிப்பு பணிகள் நாள் தோறும் நடைபெறும் என்ற போதிலும் இந்த இரண்டு நாட்களில் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிப்புப் பணியாளர்கள் வீட்டிலேயே தங்கியிருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றில் கடமையாற்றிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டமை உறுதியாகியிருந்தது.

எவ்வாறெனினும், இந்த வாரத்தில் பாராளுமன்ற அமர்வுகள் எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெட்டுப்புள்ளிகள்...

பார்வையிடலாம்.

புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சை நடைபெற்றதால், தனி வெட்டுப்புள்ளிகள் வழங்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ம-3)

## முடிவுகள் எடு...

சந்திக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸ் அபாயத்தில் உள்ள மாவட்டங்கள் குறித்து அதிகாரிகள் இன்னும் முடிவுகளை எடுக்கவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே சுட்டிக் காட்டினார்.

அத்தோடு அதிகாரிகள் எடுக்கும் சில முடிவுகள் மக்களுக்கு தவறான சமிக்ஞைகளை காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொரோனா தொற்றின் இரண்டாவது அலையின் ஒரு பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள பேருவளை மற்றும் களுத்துறை பகுதிகளில் ஊரடங்கு உத்தரவை தளர்த்தும் நடவடிக்கை குறித்தும் வைத்தியர் ஹரித அளுத்கே அதிருப்தி வெளியிட்டார். (ம-3)

## யாழ்.போதனா...

வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாற்றப்பட்ட ஒருவருக்கும் கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மாற்றப்பட்ட பெண் ஒருவருக்குமே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருவரிடமும் பெறப்பட்ட மாதிரியின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று மாலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம-3)

## சாரதி...

அவர்கள் இருவரும் கடந்த 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் பாசையூரிலுள்ள கடலுணவு நிறுவன வளாகத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரண்டு பேரும் கோவிட் - 19 சிகிச்சை நிலையங்களுக்கு மாற்றப்படுவதுடன் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் தொடர்ந்து சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் அதிகாரிகள் கூறினர்.

மேலும் மன்னார் பகுதியைச் சேர்ந்த வாகன சாரதி ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,18)

## பஞ்சாப் வெற்றி




கொல்கத்தா 149/9 (20 ஓவர்)
பஞ்சாப் 150/2 (18.5 ஓவர்)
பஞ்சாப் 8 விக்கெட்டுக்களால் வெற்றி
ஆட்டநாயகன் கிறிஸ் ஹெய்ல் (பஞ்சாப்)

## பாதிப்பு 8 ஆயிரத்.

தணியை அடுத்து 4 ஆயிரத்து 939 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 8 ஆயிரத்து 413 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)


சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 26/10/2020 | 1547 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 6 | வெற்றி இலக்கங்கள் 15 22 41 42

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 2582
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 11 14 21 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0654
B 15 | 02 26 34 64

மஹஜன சம்பத
திகதி 2020/10/26
சீட்டிழுப்பு இலக்கம் 4287
D 4 0 7 9 6 1
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1625 | திகதி 2020/10/26
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 17 21 24 51
தேசிய லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
திகதி 26/10/2020 | வெற்றி வாரம் 2964
சுப்பர் ஜக்பொட் ரூ. 35,81,348 | வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 18 23 28 34 | விருச்சிகம்
ரூ.500 பரிசுக்குரிய 7942 | ரூ.100 பரிசுக்குரிய 761
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,902,480

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1701 | சீட்டிழுப்பு திகதி 26/10/2020
வெற்றி இலக்கங்கள் 19 24 27 42 | ஆங்கில எழுத்து G
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,424,448
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1257 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 26.10.2020 | தினம் திங்கட்கிழமை
A 29 32 45 56 | 51,585,230/=
SUPER 500 8 2 5 5

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1083 | இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 81,119,315/-
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.10.26
வெற்றி இலக்கங்கள் 02 06 15 50 | ஆங்கில எழுத்து M

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.26 | இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,215,898.60
சீட்டிழுப்பு இல.: 3413
வர்ணம் : நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 06 53 67 | ஆங்கில எழுத்து B
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 6964

### பேலியகொட, மினுவாங்கொட

# இரண்டு இணைப்புகளில் கொரோனா பாரியளவில் நாடு முழுவதும் பரவியுள்ளது

## தொற்று நோயியல் வைத்தியர் சுதத் சமரவீர

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கண்டறியப்படுகின்ற கொரோனா தொற்றாளிகள், பேலியகொட மீன் சந்தை மற்றும் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை தொடர்பிலேயே கண்டறியப்படுவதாக தொற்று நோயியல் சிரேஷ்ட நிபுணர் வைத்திய கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் நோயாளிகள் சமூக மட்டத்தில் இருந்து கண்டறியப்படவில்லை என்று அவர் நேற்று ஊடகவியலாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

சமூக மட்டத்தில் இருந்து நோயாளிகள் கண்டறியப்படுவார்களானால் அது இரண்டு தொற்று இணைப்புகளில் இன்றி நோயாளிகள் கண்டறியப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் இலங்கையில் கண்டறியப்படும் அனைத்து தொற்றாளிகளும் இரண்டு பிரதான தொற்றுக்களின் இணைப்பிலேயே கண்டறியப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு இணைப்புக்களும் பாரியளவில் இன்று நாடு முழுவதும் பரவியுள்ளன என்றும் வைத்திய கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (ம-03)

# சுகாதார நடைமுறையை பின்பற்றாதவர்கள் மீது

## இறுக்கமான சட்ட நடவடிக்கை

## அரச அதிபர் க. மகேசன்

(யாழ்ப்பாணம்)

கோவிட் 19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்கள், இறுக்கமான சட்ட நடவடிக்கைகளுக்குள் உட்படுத்தப்படுவார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா செயலணி கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

கோவிட் -19 சுகாதார நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டதுடன், பொருத்தமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களை சட்ட நடவடிக்கைக்குட்படுத்துவது தொடர்பில் விசேடமாக கலந்துரையாடப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை உரிய தரப்பினர் முன்னெடுப்பார்கள்.

தற்போது 226 குடும்பங்களைச் சேர்ந்த 424 பேர் சுய தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதேபோன்று, கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்குள் 14 பேர் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

அதேநேரம், கொரோனா தொற்றுக்குள்ளாக்கப்பட்டவர்கள் 4 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தொற்றுக்குள்ளானவர்களுடன் பழகியவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு தங்கி நின்று வேலை செய்பவர்களின் விபரங்களை சேகரிக்குமாறு, பிரதேச செயலாளர்களைக் கேட்டிருக்கின்றோம். அவ்வாறு சேகரிக்கப்படும் விபரங்கள் தேவைப்படுமிடத்து, சுகாதார பகுதியினரால், உரிய நடவடிக்கைக்குள் உட்படுத்தப்படும்.

அத்துடன், கடல்மார்க்கமாக, சட்டவிரோதமாக கடத்தல்களில் ஈடுபடுபவர்கள் கண்காணிக்கப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய தரப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது, யாழ். மாவட்டம் சற்று முன்னேற்றமாக உள்ளது. இருந்த போதிலும், இத்தொற்றை வராமல் தடுப்பதற்கு, நாங்கள் எவ்வளவு முயற்சிகள் எடுத்து, அனைவரும் இந்த சுகாதார நடைமுறைகளையும், போக்குவரத்து நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

எனவே, பொது மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, உங்களது பாதுகாப்பையும், குடும்பத்தினரின் பாதுகாப்பையும், சமூகத்தின் பாதுகாப்பையும், உறுதிப்படுத்திக்கொள்வதுடன், பாதுகாப்பதும் அவசியம் என்பதை உணர்ந்து செயற்படுமாறு அரசாங்க அதிபர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-03,18,101)

# துமிந்தவின் விடுதலையை எதிர்க்கவில்லை - மனோ

(கொழும்பு)

கொலைக்குற்றவாளி துமிந்த சில்வாவை விடுதலை செய்வதை தான் எதிர்க்கவில்லை யென தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன். ஆனால், அதேபோல தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவை பொது மன்னிப்பில் விடுவிக்கும் மனுவில் தான் கையொப்பமிட்டதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரை சுட்டுக் கொலை செய்த குற்றத்திற்காக துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு 2016 செப்டம்பர் 8 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-03)


காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், வசாவிளான், குட்டியபுலம் அபிராமி அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கப்படும். ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் ரூபாய்.(300,000.00). தரகர் தேவையில்லை. (4482)

தொடர்பு குரு : 077 998 6806
074 075 4204, 076 888 4625

காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், ராச வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்பு (சீர் செய்யப்பட்ட) காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (4482)

தொடர்பு குரு : 077 805 1655,
077 468 3354, 076 640 0974

கணினி திருத்தம்

கணினி, லப்டொப் சிறந்த முறையில் திருத்தித் தரப்படும். (வீடுகளுக்கு வந்தும் திருத்திக் கொடுக்கப்படும்.) (4475)

076 827 5129, 021 222 8797
PC Garage
255B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
முத்தர்
திருநாவுக்கரசு

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

பிறப்பு 11.04.1941
இறப்பு 08.11.2015

கராஜ் லேன்,
சண்டிலிப்பாய்.

மனைவி,
பிள்ளைகள்


வேலை வாய்ப்பு

அலுவலக உதவியாளர் தேவை. தனியார் அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு பெண் ஊழியர் தேவை. (4480)

076 788 9697, 077 572 9724

குங்குமம் திருமாங்கல்ய சேவை

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள். (4480)

077 572 9724, 076 788 9697

காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதி, ஞான வைரவர் கோவிலடியில் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

(இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.) (4467)

தொடர்பு : 077 615 3238
077 463 9303, 077 428 6189

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜேர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /= Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் · கிளிநொச்சி · சாவகச்சேரி · நெல்லியடி · கொடிகாமம் · மானிப்பாய் · புதுக்குடியிருப்பு · சுன்னாகம் · பருத்தித்துறை · வல்வெட்டித்துறை
(C-555)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

அமெரிக்க அதிஸ்ட விசா

2022ல் நீங்களும் அமெரிக்காவில்...

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

0768226241



இன்னும் 10 நாட்களே உள்ளது

கமலேந்திரன் -குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.